
சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

டிசம்பர் 2013 – ஜனவரி 2014



தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்,
துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும்
சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்
(சங்கீதம் 90:15)

பொருளடக்கம்

சத்தியவசனம்



அந்த நட்சத்திரம்
உன் ஜீவிய காலமெல்லாம் உன் கண்கள்
கிறிஸ்துவின் மேலேயே இருக்கட்டும்!



யோவான்ஸ்நானகன்கள் எழும்பட்டும்
கிறிஸ்துவுக்காய் தமது வாழ்வையே துச்சமாக
எண்ணுகிறவர்கள் கர்த்தருக்குத் தேவை!



ஆசரிப்புக் கூடாரம் தியான வாழ்க்கை
இயேசு கிறிஸ்து தமது வாழ்க்கையின் முழுமும்
வார்த்தையின் முழுமும் கடவுளை வெளிப்படுத்தினார்!

இலக்கை நோக்கி ஓடுங்கள்!
கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக
இலக்கை நோக்கி ஓடுங்கள்!





உற்ற நண்பன் இயேசு
நீ கிறிஸ்துவை உன் நண்பனாகப் பெற்றிருந்தால்
அவரை பிறருக்கு அறிமுகப்படுத்துபவனாய் இரு!

இரண்டு விதமான ஜெபம்
தன்னை உயர்த்துகின்றவன் தாழ்த்தப்படுவான்.
தன்னை தாழ்த்துகின்றவன் உயர்த்தப்படுவான்!





பயப்படாதிருங்கள்
நமக்காக ஒரு இரட்சகர் பிறந்திருக்கிறார்.
இதுவே உலகிற்கு பயத்தை நீக்கும் செய்தி!

BACK TO THE BIBLE®
பிபிலாலோகய சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

சத்தியவசனம்

நிர்வாக இயக்குநர்
மயூக பெரேரா

தொகுப்பு,
சஞ்சிகை ஆசிரியர்
வஷ்னீ ஏனர்ஸ்ட்

வடிவமைப்பு
கிரேஸ் ஜெனிட்டா

விநியோகம்
வனஜா ராஜ்குமார்

முகாமையாளர்
ரவிசங்கர் சண்முகம்

நிதி/நிர்வாகம்
சுபாஷ் சுந்தரலிங்கம்

சத்தியவசனம் சஞ்சிகை
இருமாதத்திற்கு ஒரு தடவை
(வருடத்திற்கு 6 இதழ்கள்)
வெளிவருகின்றது.

இலங்கை தபால் திணைக்களத்தில்
QD/106/News/2013.
பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அனைத்து தொடர்புகளுக்கு:

சத்தியவசனம்
120A, Dharmapala Mawatha,
Colombo 7, Sri Lanka.

மின்னஞ்சல்:
sathiyavasanam@backtothebible.lk

இணையத்தளம்:
http://www.backtothebible.lk/
interact-with-us/contact-us

"உங்களுக்கு தேவையற்ற விளையாட்டுப் பொருட்களைக் கொண்டுவந்து திருச்சபைக்கு பின்னாலுள்ள பெட்டிக்குள் வையுங்கள்" என்ற அறிவிப்பு ஒரு திருச்சபையின் அறிவிப்பு பலகையில் போடப்பட்டிருந்தது. இந்த கிறிஸ்து பிறப்பு பண்டிகை யின் காலத்தில், இவ்விளையாட்டுப் பொருட்களை எடுத்து வசதி வாய்ப்பற்ற பிள்ளைகளுக்கு பரிசாகக் கொடுப்பதற்காகவே இவை சேகரிக்கின்றது என நான் எண்ணினேன்! எது எப்படியாயினும், அவர்கள் கூறியபடி இந்நாட்கள் கொடுத்தலின் காலமே!

திருச்சபையிலுள்ள ஒருவராகிலும் அந்த அறிவிப்பிலுள்ள குழப்பத்தை குறித்து அவதானிக்கவேயில்லை.

நீங்கள் அவதானித்தீர்களா?

(இல்லை. இது மொழியல்ல. மனப்பான்மை சார்ந்த ஒரு குழப்பமாகும்!)

சிறப்பானவற்றிலும் தரக்குறை வானவற்றையே - தேவையற்ற விளையாட்டுப் பொருட்கள், இரண்டாம்தர ஆடைகள், பழைய சஞ்சிகைகள், காலதாமதமடையும் நிலையிலுள்ள இனிப்புக்கள் - பிறருக்கு கொடுக்கும் வழக்கமுடையவர்களாக நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். சிறந்த, புதிய, விலையேறப்பெற்ற கொடைகளுக்குப் பதிலாக, தேவையற்ற பொருட்களைக் (மட்டுமே?) கொடுத்தல் எவ்வளவு தவறானது என்பதை திருச்சபையாக அவதானிக்க தவறிவிடுகிறோம்.

தேவனுக்குக் கொடுக்கும்போது, எமக்குள்ள மனப்பான்மையில் இருந்தும் இது வேறுபாடுள்ளதாக காணப்படுகின்றதா?

மல்கியா 1ல், ஜனங்கள் சிறப்பானவற்றிலும் தரக்குறைவானதையே கொடுத்தபடியால் தேவன் தம் மக்களைக் கடிந்துகொள்கிறார்.

"இதோ, இது எவ்வளவு வருத்த மென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசி, பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல் கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள் ....அதை உங்கள் கைகளில் அங்கீகரித்துக்கொள்வேனோ என்று கர்த்தர் கேட்கிறார்... கெட்டுப் போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்; என் நாமம்

மகத்தான கொடையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அதைக் கொடுத்தவரைக் குறித்ததான ஒரு நினைவூட்டல்.

நீ சிறப்பானதை கொடுக்கின்றாயா?

உன் கொடை உன்னைப் பிரதிபலிக்கின்றதா?

ஜாதிகளுக்குள்ளே பயங்கரமா யிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 1:13,14)

இத்தகைய கொடைகளை தேவன் விரும்புவதில்லை.

உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்; என் பலிபீடத்தின்மேல் அக்கினியைக் கூலியில்லாமல் கொளுத்தவு மாட்டீர்கள்; உங்கள்பேரில் எனக்குப் பிரியமில்லையென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகி றார்; உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல. (மல்கியா 1:10).

இவ்வாறான கொடைகளை நாம் தேவனுக்கு கொடுக்கலாகாது. அவ்வாறே பிறருக்கும் இவ்வாறாக கொடுப்பது கூடாத காரியமே.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையின் காலத்தில், நாம் கொடைகளைக் கொடுக்கும்போது, மகத்தான ஒரு கொடையை தேவன் எமக்குத் தந்துள்ளார் என்பதை அதைப் பெறுபவர்களும் கொடுப்பவர்களு மாகிய நாம் -நினைவிற்கொண்டு, சகல ஈவுகளுக்கும் காரணராயிருக் கிறவரையும், அக்கொடைகளுக்குப் பின்னாலுள்ள எம் மனப்பாங்கை யும், நினைவுகூரும் ஒரு பிரதிபலிப்பாக நாம் கொடுக்க வேண்டுமல்லவா?

தேவன் தமது அதிசிறப்பானதையே தந்தார். அவர் தாம் அதிகமாக நேசித்த தமது ஒரேபேறான விலைமதிக்கமுடியாத குமாரனையே எமக்காகத் தந்தார். நாம் தகுதி யற்றவர்களாக இருந்தபோதிலும், தமது கிருபையினாலும் தாராள மனதோடும் இக்கொடையை எமக்கே அவர் தந்தார்.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையின் காலத்திலும், வரப்போகின்ற வருடத்திலும், எமது கொடை களானது, இவ்விதமான மனப் பான்மையை வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டுமல்லவா?

அவ்வாறாகவே இருக்கவேண்டும்!

அப்படிச் செய்வீர்களா? அப்படியே செய்வீர்களென நம்புகின்றேன்...

கிறிஸ்துவுக்குள்,

Mayukha





கிறிஸ்மஸ் வந்துவிட்டால், குழந்தைகளை மகிழ்விக்கிற அநேக காரியங்களுக்குள் நட்சத்திரமும் ஒன்று. வீட்டுக்கு வீடு அழகிய நட்சத்திரங்களைச் செய்து, அதில் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் என்று எழுதி, அதனுள் ஒரு மின்சார பல்ப்பை மாட்டி, அதனை விட்டுவிட்டு எரியும்படி அமைத்து உயரத்தில் தொங்கவிடுவதுண்டு. ஆனந்த மான இரவு நேரங்களில் குளிர்ந்த இனிமையான வானத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் கண் சிமிட்டி சிரித்து மகிழும் அழகே தனி! நட்சத்திரங்கள் இருளில் பிரகாசிப்பவை, அழகானவை, குளிர்ச்சியானவை!

ஏன் இந்த நட்சத்திரங்களைப் பகலில் பார்க்க முடிவதில்லை? பகலில் நட்சத்திரங்கள் இல்லவே இல்லையா? இருக்கிறதென்றால் ஏன் அவைகள் நமது கண்களுக்குத் தெரிவதில்லை? ஏன் என்றால் சூரியன் தன் ஒளிக் கதிர்களை எல்லாம் ஆகாய மண்டலத்தில் நிரப்பி தூரத்தில் இருக்கும் நட்சத்திரங்களைக் காணாதபடி மறைத்துவிடுகிறது. பகல் முழுவதும் நாம் பார்ப்பது சூரியனை மட்டுமே. ஆனால் எவ்வளவு நேரம் இந்த சூரியன் நட்சத்திரங்களை மறைத்துக் கொண்டிருக்கும்? அது அஸ்தமிக்கும் நேரம்வரைக்கும் தான். அதன் பின்பு நாம் நமது கண்களை ஏறெடுத்தால் ஒரு நாளின் மறுபகுதியை பிரகாசிக்குமளவிற்கு நட்சத்திரங்களைக் காணலாம்.

இந்த சூரியன் அருகில் நின்று மிக உயரத்திலிருக்கும் நட்சத்திரங்களை மறைப்பதைப் போலவே, நமது வாழ்க்கைப் போராட்டங்கள், தேவைகள் மிக உன்னதமான நித்திய ஆசீர்வாதங் களைக் காணக்கூடாதபடி, மறைத்து விடுகின்றன.

வாழ்நாளெல்லாம் மனுஷன் தன் வயிற்றுக்காக, பணம் சம்பாதிப்ப தற்காக மற்றும் உலகப்பொருள் ஆகிய இவற்றிற்காகவே வாழ்கிறான், உழைக்கிறான். இப் பிரபஞ்சத்தின் லோகாதிபதியான சாத்தான் மனிதரின் மனக்கண் களைக் குருடாக்கிப் போடுகிறான். ஆனால் மனிதனின் வாழ்வு அஸ்தமிக்கும்போது அல்லது இருள் சூழும்போதுதான் இனி ஒரு நித்தியம் இருக்கிறதா என்னும் உண்மையை காலம் கடந்து புரிந்துகொள்கிறான்.

உலகத்திற்காகவே வாழ்ந்து மறையும் மனிதனை நித்தியத்திற்கு வழிநடத்த உலகத்தில் வந்துதித்த பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமே, எனதருமை இயேசு கிறிஸ்து! அல்லேலூயா! அவர் பூமியில் வந்துதித்தார் என்று அறியும்போது, மிக ஆனந்த சந்தோஷம் உண்டாகாதா?

ஆபிரகாமும் நட்சத்திரமும்.

"...நீ வானத்தை அண்ணாந்து பார்," ஆபிராகாமிற்குக் கர்த்தர் கட்டளையிட்டார். "...நட்சத்திரங் களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." (ஆதி. 15:5)

அன்று வானத்தை அண்ணார்ந்து பார்த்த ஆபிரகாம், அதில்

பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமான இயேசுவைக் கண்டாரோ இல்லையோ, ஆனால் ஒரு உன்னதத்திற்குரிய ஆசீர்வாதமான சந்ததி உருவாகப் போகிறதென்பதை உணர்ந்து, உடனே விசுவாசித்தார். அந்த சந்ததி கிறிஸ்துவே!

ஆபிரகாமுக்குப் பிறக்கப்போகும் சந்ததியைக் கர்த்தர் இரண்டு காரியங்களுக்கு ஒப்பிட்டார். ஒன்று கடற்கரை மணல், அடுத்தது வான நட்சத்திரங்கள். ஒன்று பூமிக்குரியது. மற்றது உன்னதத்திற்குரியது. இன்னும் சொல்லப்போனால் ஒன்று மாம்சத்திற்குரியது, மற்றது ஆவிக்குரியது. ஒன்று எழுத்தின்படியான இஸ்ரவேலர், மற்றது கிறிஸ்துவின் உடன் சுதந்திரர். ஆபிரகாம் அன்று ஆவலோடு வானத்தை அண்ணார்ந்து பார்த்ததிலிருந்து, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களெல்லாரும்கூட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவிற்காக அண்ணார்ந்து பார்த்துக்கொண்டே வந்தார்கள். எவ்வளவு மகிமையான எதிர்பார்ப்பு!

கிழக்கிலிருந்த சாஸ்திரிகளுக்கு அதெல்லாம் தெரியுமோ தெரியாதோ நாம் அறியோம். ஆனால் அவர்கள் வானத்தை அண்ணார்ந்து பார்த்தபோது, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்றார்கள் (மத்தேயு 2:2). அவர் யூதருக்கு மட்டும் ராஜாவல்ல. சாஸ்திரிகளுக்கும் ராஜாவானார். நமக்கோ ராஜாதி ராஜாவும், தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தருமானவர். அல்லேலூயா!

சாஸ்திரிகளுக்கான நட்சத்திரம்!

சாதாரண மனிதன் அந்த நட்சத்திரத்தைப் பார்த்திருப்பானேயாகில், அதின் அர்த்தம் என்னவென்று அறிந்துகொள்ள மாட்டான். ஏதோ ஒரு பெரிய வெளிச்சமுடனான நட்சத்திரம் என்று சொல்லி அசட்டையாகப் போயிருப்பான். ஆனால் ஞானிகள் அதைக் கண்டபோது, ஒரு ராஜா பிறந்திருக்கிறார் என்றும், அவர் பணிந்து கொள்ளப்பட வேண்டியவர் என்பதையும் உடனே அறிந்துகொண்டார்கள்.

மேய்ப்பர்களுக்கு தேவதூதன் மூலமாக இந்த நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பானுவேலின் குமாரத்தியாகிய அன்னாளுக்கு தீர்க்கதரிசனம் மூலம் வெளிப் படுத்தப்பட்டது. ஞானிகளாகிய சாஸ்திரிகளுக்கு நட்சத்திரம் மூலம் விளங்கப்பண்ணப்பட்டது. எனவே எந்த மனுஷனுக்கும் அவனவனுடைய புரிந்துகொள்ளும் தகுதியின்படி தன்னை வெளிப்படுத்தி, அவனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியானவரே அந்த நட்சத்திரம்! அல்லேலூயா!

தேவபிள்ளையே கிறிஸ்துவைத் தேடுவதில் உனக்கு அக்கறை உண்டா? நம் ஒவ்வொருவருக்கும் நட்சத்திரமாக வேதவசனங்களைக் கொடுத்திருக்கிறாரே. தங்களுக்கு கிடைத்த கொஞ்ச வெளிச்சத்திலே பாதையெங்குமுள்ள கல்லையும் முள்ளையும் தாண்டி, பல தேசங்களையும் பல நாடுகளையும் கடந்து, களைப்படையச் செய்யும் ஒட்டகப் பிரயாணத்திலே பெத்லகேம் பாலகனைத் தரிசிக்க வந்தார்களே, அவர்கள் ஞானிகள்தான். கிறிஸ்துவைத் தேட அன்று சாஸ்திரிகள் காட்டிய வாஞ்சையும், ஊக்கமும் உன்னிடம் உண்டா? கர்த்தர் வாக்குறுதியோடு சொல்லுகிறார். "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்". (ஏரேமியா29:13)

கிழக்கிலே தோன்றின நட்சத்திரம்!

நான்கு திசைகளுக்குள் இந்த நட்சத்திரம் கிழக்கே தோன்றினது. இயேசு இந்த உலகத்தில் அவதரித்தபோது, அவரது ஒவ்வொரு சொல்லும், செயலும், அசைவும் ஆழமான அர்த்தங் களை உள்ளடக்கியிருந்தன. இவ்வாறே கிழக்கே தோன்றினதற்கும் ஒரு அர்த்தம் இருக்கலாம் அல்லவா?

ஆதியிலே "தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு



தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்" (ஆதி.2:8). அவர்கள் கீழ்படியாமல் போனதினால் பாவமும் கிழக்கிலிருந்துதான் பரவ ஆரம்பித்தது.

எனவே, பாவத்தை வேரறுக்க ஒரு பரிசுத்த பாலகன் தோன்ற வேண்டியிருந்தது. அந்த பாலகனை உலகத்திற்குக் காண்பிக்க ஒரு நட்சத்திரமும் கிழக்கே தோன்றிற்று. கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாஸ்திரிகளை வழிநடத்தி கிறிஸ்துவண்டை கொண்டுவந்து சேர்த்தது, அல்லேலூயா!

நம்மைக்குறித்து தேவனுக்கும் அதே நோக்கமுண்டு. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்..." என அந்த நோக்கத்தைப் பேதுரு அப்போஸ்தலன் எழுதுகிறார். (1பேது.2:9)

பாவத்தை அகற்றும் புண்ணியரண்டை ஜனங்களை வழிநடத்துவது எவ்வளவு சிலாக்கியம். அந்த மேன்மையான பணியை அன்று, நட்சத்திரம் கிழக்கிலே ஆரம்பித்து வைத்தது. இன்று நீ தொடர்கிறாயா? நீயே இன்றைய கிழக்கத்திய நட்சத்திரம். கிறிஸ்துவின் வருகை மிக நெருங்கியுள்ள இந்த நாட்களில் கிறிஸ்துவுக்காக துரிதப்படுவாயாக.

வழி நடத்தும் நட்சத்திரம்!

"...அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம், பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும், அவர்களுக்கு முன்சென்றது." (மத்.2:9)

நட்சத்திரம் வழிகாட்டியிராவிட்டால் சாஸ்திரிகளின் பாடு திண்டாட்டம் தான். காடு, மலை, பல தேசங்களைக் கடந்து இரவும், பகலும் பிரயாணஞ் செய்திருக்க முடியாது. வழிகாட்டும் நட்சத்திரங்கள் எவ்வளவு அவசியம்.

"...அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10:14) தேவ பிள்ளையே உன் பேச்சு, உன் செய்கைகள், பிரசங்கங்கள், பாடல்கள் எல்லாம் ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்துகிறதாக இருக்கிறதா? சிந்தித்துப் பார்ப்போம்.

நட்சத்திரத்தை ஒழுங்காகப் பின்பற்றிய சாஸ்திரிகள் திடீரென்று தங்கள் மாம்சீக சிந்தைக்கு இடங்கொடுத்தார்கள். மனுஷீக பிரகாரமாக, யூதருக்கு ராஜா ஒரு அரண்மனையில்தான் பிறப்பார் என்று எண்ணியபோது, ஏரோதின் அரண்மனைக்குள் பிரவேசித்து விட்டார்கள். அந்த மனுஷீக ஞானத்தால் ஏராளமான பச்சிளம் குழந்தைகள் ஏரோதின் பட்டயத்திற்கு பலியாக வேண்டியிருந்தது. நட்சத்திரம் ஒன்றுதான். முழுமையாய்ப் பின்பற்றினால் கிறிஸ்துவண்டை வழிநடத்தும், உலக ராஜாக்களைப் பிரியப்படுத்த நினைத்தால் அது அழிவை உண்டாக்கும். வேதப் புத்தகமும் ஒன்றுதான். நீ எப்படி பின்பற்றுகிறாய்? தேவ பிள்ளையே நீ ஆவியிலே ஆரம்பித்து மாம்சத்தில் முடித்து விட்டாயோ?

உன் ஜீவிய காலமெல்லாம் உன் கண்கள் கிறிஸ்துவின் மேலேயே இருக்கட்டும். உனக்கு நட்சத்திரமாக வேதவசனத்தையும், பரிசுத்த ஆவியையும் கொடுத்திருக்கிற தேவனை இருகரங்களையும் உயர்த்தி ஸ்தோத்தரிப்பாயாக! வலது புறமும் இடது புறமும் சாயாதபடி, நமது கண்கள் பரம கானானிலேயே இருக்கட்டும். மறுபடியும் நாம் ராஜாதி ராஜாவைக் கண்டு மகிழும் நாட்கள் வெகு அருகே சமீபித்து விட்டது. அவரைச் சந்திக்க நாம் ஆயத்தப்படுவோமாக.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



புதிதாக
வெளிவந்துள்ளது....!

கண்ணோக்கினேன்..!

இனிய பாடல்கள்
அடங்கிய இறுவட்டு

சத்தியவசனம் வெளியீடு

விலை ரூ. 250.00

(எமது புத்தகசாலையில்
பெற்றுக்கொள்ளலாம்)

கேள்வி

இயேசுவின் பிறப்பைக் குறித்துக் கேள்விப்பட்டு வந்த வான சாஸ்திரிகளைப் பற்றி விளக்குவீர்களா?

–எம்.எஸ்.வசந்தகுமார்–



பதில்

இயேசுவின் பிறப்பைக் குறித்துக் கேள்விப்பட்டு வந்த வான சாஸ்திரிகள் பலஸ்தீனாவுக்குக் கிழக்குப் பகுதியிலிருந்த பாரசீகத்திலிருந்து வந்தவர்கள் என்று நம்பப்படுகின்றது.

சாஸ்திரிகள் என்பதற்கு மூல மொழியில் உள்ள பதம் ஆரம்ப காலத்தில் மேசியாவிலிருந்த ஆசாரியர்களைக் குறிக்கவே உபயோகிக்கப்பட்டது. கனவுகளுக்கு விளக்கமளிக்கும் ஆற்றல் மிக்க இத்தகைய சாஸ்திரிகள் பாபிலோனிலும் இருந்துள்ளதை தானியேல் 1:20; 2:2; 4:7; 5:7 வசனங்களின் மூலமாக அறிந்திடலாம்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஜோதிடர், மந்திரவாதிகள், வான சாஸ்திரிகள் என்போரும் இப்பதத்தின் மூலமாகவே அழைக்கப்பட்டனர். இயேசு கிறிஸ்துவைப் பார்க்க வந்த சாஸ்திரிகள், கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு வந்தமையினால், அவர்கள் வான சாஸ்திரிகளாகவே இருக்க வேண்டும். இவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு மூன்று பரிசுகளைக் கொடுத்தமையினால் (மத்தேயு 2:11) சாஸ்திரிகள் மூவர் வந்திருக்க வேண்டும் என பாரம்பரியம் கூறுகிறது.


அத்தோடு சங்கீதம் 68:29,31; 72:10-11, ஏசாயா 49:7; 60:1-6 எனும் வசனங்கள், ராஜாக்கள் வந்து மேசியாவை வழிபடுவார்கள் என அறியத் தருவதனால் கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் ராஜாக்களாகவும் இருந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகின்றது. இந்த சாஸ்திரிகள், ஒரு நட்சத்திரத்தின் மூலமே யூதருக்கு ராஜா பிறந்திருக்கின்றார் என்பதை அறிந்துகொண்டனர் (மத்.2:2).

வேதாகமம் வான சாஸ்திரம் உட்பட சகல விதமான ஜோதிட சாஸ்திரங்களையும் வன்மையாக கண்டிப்பதனால் (ஏசாயா 47:13-15; தானியேல் 1:20; 2:27; 4:7; 5:7; எரேமியா 10:1-2) தேவன் வான சாஸ்திரத்தின் மூலமாக இயேசுவின் பிறப்பை சாஸ்திரிகளுக்கு அறிவித்திருக்க மாட்டார். தான் தடைசெய்த சாஸ்திரத்தினூடாக தேவன் செயல்பட்டால் அவர் முரண்பாடுடையவராகி விடுவார்.

இயேசுவின் பிறப்பை முன்னிட்டு வானத்தில் ஒரு சிறப்பான நட்சத்திரத்தைத் தோன்றப் பண்ணியது மட்டுமே தேவனின் செயலாகும். அந்நட்சத்திரத்தைக் கண்ட சாஸ்திரிகள் தமது ஆராய்ச்சியின் மூலம் யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டுள்ளனர். "கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டோம்" எனும் சாஸ்திரிகளின் கூற்று (மத்தேயு 2:2) இதையே அறியத்தருகின்றது.

தேவன் வான சாஸ்திரத்தின் மூலம் செயற்படவில்லையாயின், வானில் தாம் கண்ட நட்சத்திரத்தின் மூலம் யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என்பதை சாஸ்திரிகள் எப்படி அறிந்து கொண்டனர் என நாம் வினவலாம். அக்காலத்தில் பாரசீகப் பகுதிகளில் யூதர்களும் குடியிருந்தமையினால் அவர்களுடைய மார்க்க நூலில் மூலம் யூதருக்கு ராஜா பிறந்திருப்பதை சாஸ்திரிகள் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக, எண்ணாகமம் 24:17 இலுள்ள தீர்க்கதரிசனப் பகுதியின் மூலமே சாஸ்திரிகள் யூதருக்கு ராஜா பிறந்திருப்பதை அறிந்திருப்பர். அத் தீர்க்கதரிசனத்தில், ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

தாம் கண்ட நட்சத்திரத்தைப் பற்றி ஆராய்ந்த சாஸ்திரிகள், இத் தீர்க்கதரிசன வார்த்தைகளை அடிப்படையாய்க் கொண்டே, யூதரின் ராஜாவைத் தேடி எருசலேமுக்கு வந்திருக்க வேண்டும்.



யோவான் ஸ்நானன்கள் எழும்பட்டும்!

–சாந்திபொன்னு

விண்ணைத் துறந்து, மண்ணில் வந்துதித்து, நம்மை இரட்சித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தில், சத்திய வசனம் சஞ்சிகை வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களும், புதுவருட நல்வாழ்த்துக்களும் உங்களுக்கு உரித்தாகட்டும்.

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று." (ஏசாயா 40:3-5)

கடவுள் மனிதனாய் இவ்வுலகில் வந்து பிறந்தது, திடிரென சம்பவித்த ஒரு நிகழ்வு அல்ல. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதியாகமம் 3:15) என்று முதன்முதலாக ஏதேனிலே கர்த்தரால் சாத்தானுக்குச் சொல்லப் பட்டு, காலாகாலமாக திருஷ்டாந்தங்களால் விளக்கப்பட்டு, தீர்க்கர் களால் திட்டவட்டமாக முன்னுரைக்கப்பட்ட செய்தியே அது. அதிலும் ஏசாயா, கர்த்தருக்குக் கீழ்ப்படியாத ஜனத்துக்கு வரப்போகும் துயரத் தைக்குறித்து முதல் 39அதிகாரங்களில் கூறிவிட்டு, (கி.மு. 700ம் ஆண்டளவில் உரைக்கப்பட்டது) பின்னர், தன் ஊழியத்தின் கடைசி பகுதியில் (கி.மு. 681ம் ஆண்டளவில்) கர்த்தர் தமது ஜனத்தை ஆற்றித் தேற்றி, அவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் மீட்பு, இளைப்பாறுதல், மாத்திரமல்ல, இறுதி நிகழ்வுகளைப்பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தி ருப்பதையும் நாம் வாசிக்கிறோம். அப்படியே கிறிஸ்து வந்து பிறந்தார்.

ஆறுதல், நம்பிக்கை, விடுதலை அளிக்கும் வார்த்தைகள் இஸ்ரவேலுக்கு உரைக்கப்பட்டபோது, எருசலேம் பாபிலோனின் கையில் விழுவதற்கும், எருசலேம் அழிக்கப்படுவதற்கும் இன்னமும் ஏறத்தாழ 100 ஆண்டுகள் இருந்தன. அதாவது, யூதா இன்னமும் நூறு ஆண்டுகள் பிரச்சனைக்குள் வாழவேண்டியிருந்தது. மாத்திரமல்ல, 70ஆண்டுகள் பாபிலோனின் சிறையிருப்பில் யூதா இருக்கவேண்டியும் இருந்தது. சிறையிருப்பின் பின்னர் எருசலேமுக்கு திரும்பி ஆலயமும் அலங்கமும் கட்டப்பட்டாலும், மேசியாவின் வருகைக்கு மேலும் பல நூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. மேசியாவின் வருகையின் காலம் கனிந்துவிட்டது என்பது உறுதியாகத் தெரிந்திருந்தாலும், அது நிகழப்போகும் காலப் பகுதி குறிப்பாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், மேசியா வருகிறார் என்ற நம்பிக்கையைக் கர்த்தர் தமது ஜனத்துக்கு முன்கூட்டியே கொடுத்திருந்தார். அப்படியே ஏற்ற காலத்தில் இயேசு வந்து பிறந்தார்.

யோவான் ஸ்நானன் பிறந்தான்: மேசியாவின் வருகையும், மீட்பின் செய்தியும் முன்னறிவிக்கப்பட்டபோது, அவருடைய வருகைக்கு முன்னர் பாதையைச் செவ்வைபண்ண ஒருவன் வருவான் என்றும் முன்சொல்லப்பட்டது. அதுவும்கூட எந்தக் காலப்பகுதியில் நிறைவேறும் என்று சொல்லப்படவில்லை. மேசியா வருவார், அதன் முன் வனாந்தரத் திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் கேட்கும் என்ற செய்தி யூதாவுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்ட செய்தி மாத்திரமல்ல, அது சரித்திரத் தில் நிகழவிருந்த நிகழ்வு. அதன்படியே, மல்கியா தீர்க்கனுக்குப் பின்பு ஏறத்தாழ 400ஆண்டு மௌனத்தின் பின்னரே, யோவான் பிறந்தான்.

இயேசு மரியாளின் கர்ப்பத்தில் உருவாகுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே, சொல்லப்பட்டபடியே, சகரியாவின் வாரிசாக எலிசபெத்தின் கர்ப்பத்தில் யோவான் உருவாகிவிட்டான் என்பதையும் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். மேசியாவின் வருகைக்கு முன்அடையாளமாகவும், அவருடைய வருகையை முன்அறிவிக்கிறவனாகவுமே யோவான்ஸ்நானன்

பிறந்தான். அவனுடைய பிறப்பு, இயேசுவின் பிறப்புக்கு முன்அடையாள மாய் இருந்தது. ஏற்றவேளையிலே வனாந்தரத்திலே கர்த்தருடைய வார்த்தை உண்டாக, மனந்திரும்புதலுக்கேற்ற காரியங்களைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினான் யோவான். இயேசு தன்னிடத்தில் வரக்கண்ட அவன், 'நானும் இவரை அறியாதிருந்தேன்... இதோ தேவ ஆட்டுக்குட்டி' என்று சாட்சி கொடுக்கிறதையும் வாசிக்கிறோம். (யோவான் 1:31-36)

இவ்விதமாக, மீட்பராக வந்த இயேசுவின் பிறப்பும், அவருக்குப் பாதை யைச் செவ்வை பண்ணுகிறவனைப் பற்றிய செய்தியும் முன்கூட்டியே ஆறுதலின் செய்தியாக, நம்பிக்கையூட்டும் செய்தியாக அறிவிக்கப்பட்டி ருந்தும், அவைகள் எப்போது எந்த வருடத்தில் யாருடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேறும் என்று அன்று யூதாவுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால், தமக்கு ஒரு ஆறுதல் வருகிறது என்ற நிச்சயம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது, அவ்வளவும்தான்.

யோவான்ஸ்நானனின் பணி: உலக ஆசாபாசங்களை ஒறுத்தவ னாக, "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று (மத்தேயு 3:2) யூதேயாவின் வனாந்தரத்தில் நின்று பிரசங்கம்பண்ணினான் யோவான். வரப்போகும் மேசியாவுக்குப் பாதையைச் செவ்வைபண்ணும் படிக்கு யோவான்ஸ்நானன் செய்த முதற் பிரசங்கம் இதுதான்.

ஜனங்கள், ஆயக்காரர், போர்ச்சேவகர் என்று தன்னிடத்தில் வந்த யாவருக்கும் மனந்திரும்புதலுக்கேற்ற செய்தியைக் கொடுத்து, ஞானஸ் நானமும் கொடுத்து, அவர்களை ஆயத்தம் செய்தான் இவன். இயேசு வைக் கண்டு, இவர்தான் மேசியா என்று உணர்ந்து அறிந்து கொண்டவன், தாமதமின்றி, "இவரே தேவனுடைய குமாரன்" என்று சாட்சி கூறி அறிவித்தான். அந்த இயேசு உலகில் மனிதனாய் வந்து பிறந்ததையே நாம் இன்று நினைவு கூருகிறோம். காலநேரம் அறிவிக்கப்படாவிட்டாலும், இயேசுவின் பிறப்பிற்கு வழியை ஆயத்தம் செய்ய ஒருவன் வருவான் என்று முன்னுரைக்கப்பட்ட யோவான், தான் அனுப்பப்பட்ட பொறுப்பை உணர்ந்தவனாய், அதைச் செவ்வனே நிறைவேற்றினான்.

நமக்கு அளிக்கப்பட்டுள்ள பெரிய பொறுப்பு: ராஜாதி ராஜாவாக, நீதியுள்ள நியாயாதிபதியாக வரப்போகிற கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை, ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், இவ்வுலகம் எதிர்நோக்கியிருக்கிறது என்பதுவே உண்மை. நமது கண்கள் காணுகின்ற யாவும் அழிந்துபோக, புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் என்பதைக் கர்த்தர் ஏசாயாமூலம், கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்னரே அறிவித்தும் விட்டார் (ஏசா.65:17; 66:22,23). பின்னர் இயேசுவின் சீஷனாகிய யோவானும் அதைத் தரிசனமாகக் கண்டு எழுதிவைத்து விட்டார். (வெளி.21:1)

ஆனால், எப்படி முதல் வருகைக்குரிய காலப்பகுதி அறிவிக்கப்பட வில்லையோ, இரண்டாவதும் இறுதியுமான வருகையின் காலப்பகுதியும் அறிவிக்கப்படவில்லை. திருடன் வருகிறவிதமாய் வருவேன் என்றும் அந்த நாளைப் பிதாவைத் தவிர குமாரனும் அறியார் என்றும் கிறிஸ்துவே சொல்லியிருக்க, எந்தவொரு மனுஷ சக்தியாலும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தோ, உலகத்தின் முடிவைக் குறித்தோ நாள் குறிக்கமுடியாது. ஆனால், முன்னுரைக்கப்பட்டபடியே முதலாவது வருகையும், அதற்கு முன்னர் வனாந்திரத்திலிருந்து சத்தம் கேட்கும் என்ற செய்தியும் நடந்தேறியது என்றால், கிறிஸ்து வின் இரண்டாம் வருகையைக் குறித்தும் எவ்வித ஐயமுமில்லை. முதல் வருகையில் யூத மக்களே அவரை நிராகரித்தனர்; ஆனால், இரண்டாம் வருகையில், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள் என்று சொல்லப் பட்டிருக்க, யாராலும் அவரை நிராகரிக்கமுடியாது.

இந்த இரண்டாம் வருகைக்காக இன்னொரு யோவான் ஸ்நானன் முன்னோடியாகப் பிறக்கப் போவதில்லை என்பது திண்ணம். முந்திய செய்தி ஆறுதலின் செய்தி என்றால், பிந்திய செய்தி எச்சரிப்பின் செய்தி. அந்த எச்சரிப் பைக் கூறி அறிவிக்கும் பொறுப்பு தேவ பிள்ளைகளாகிய நம்மிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், நடக்கப்போகிற நியாயத்தீர்ப்புக் குறித்தும், காத்தருடைய பிள்ளைகளுக்காக



ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் வாசஸ்தலத்தைக் குறித்தும் மக்களுக்கு அறிவித்து, மனந்திரும்புதலுக்கு ஏற்ற அறிவுறுத்தலைக் கொடுத்து ஆயத்தம்பண்ணவேண்டிய பொறுப்பு இன்று நமது கைகளிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்று யோவான்ஸ்நானன் பயமின்றி தயக்க மின்றி, சொல்லவேண்டிய இடத்தில் சொல்லவேண்டியதைச் சொல்லத் தயங்காமல் தன் பணியை முடித்தார். அதற்கு உலகம் அவருக்குக் கொடுத்த பரிசு, சிரச்சேதம். அதிலும் ஒரு பெண்ணின் தந்திரத்தினால் யோவான்ஸ்நானன் கொல்லப்பட்டார்.


கிறிஸ்துவின் செய்தியை அறிவுக்கும் நமக்கும், இந்த உலகம் மாலை மரியாதையைத் தரப் போவதில்லை. ஆனால், நாம் செய்தாகவேண்டும். அது நமக்குக் கொடுக்கப்பட்ட பெரிய கட்டளை. நம்மை நரக அக்கினி யிலிருந்து கர்த்தர் மீட்டெடுத்ததை நாம் விசுவாசிப்பது மெய்யானால், இந்த நாட்களில், கொண்டாட்டம் ஒருபுறமிருக்க, தினமும் அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களைக் குறித்த பாரத்துடன் இரண்டாம் வருகையின் செய்தியை அறிவிப்பதே நமது முக்கிய பொறுப்பு.

உலகத்திலே ஒவ்வொரு விநாடியும் சராசரியாக குறைந்தது மூன்று மரணங்கள் நிகழுவதாக ஒரு கணக்கீடு சொல்லுகிறது. மரணம் மக்களை வெகுவேகமாக விழுங்கும்போது, அவர்களது ஆத்துமாவிற்கு மருந்து கொடுக்கவேண்டிய நாம் தூங்கிக் கொண்டிருப்பது எப்படி?

இடிந்துபோன பாதைகளும், அவாந்தர வெளிகளும், பள்ளங்களும்: நாம் வசிக்கின்ற பிரதேசத்தில் நீண்ட காலமாக இடிந்து குழிகளாகிக் கவனிப்பாரற்றுக் கிடந்த பாதைகள் திடீரென சுத்தப்படுத்தப்பட்டு திருத்தப்பட்டு அழகான தோற்றத்தைப் பெற்றதைக் கண்டபோது, இதுதானா பாதைகளைச் செவ்வைப்படுத்துவது என்றிருந்தது. வெயில் மழை பாராது மிகவும் கஷ்டப்பட்டு தற்காலிக இடங்களை அமைத்து வியாபாரம் செய்து ஜீவனம்பண்ணுபவர்கள் இங்கே அநேகர். அவர்கள் அந்தந்த இடங்களிலிருந்து அகற்றப்பட்ட போது மிகவும் துக்கமாக இருந்தது. ஆனால், அவர்களுக்காக புதிய ஒழுங்குகள் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டபோது, இதுதானா அவாந்தரவெளிகளில் வழிகள் கிடைக்கிறது என்றிருந்தது.

பல வருடங்களாகக் கவனிப்பாரற்றிருந்த மாடிவீடுகள் சில சுத்திகரிக்கப் பட்டு நிறம் பூசப்பட்டு அழகாகக்கப்பட்டது. முன்னர் இருந்த தோற்றத்தை நினைவிலும் நினைத்தும் பார்க்கமுடியாத அளவுக்கு, அந்த இடம் புதிய தோற்றம் பெற்றது. பழையவைகள் அகற்றப்பட்டு எல்லாம் காற்று வேகத்தில் புதிதாகின. இது எல்லாம் என்ன விசாரித்தபோதுதான், இந்தப் பிரதேசத்திற்கு நாட்டின் பெரியதொரு பிரமுகர் வருகைதரவிருப்பது தெரிய வந்தது. அவரை வரவேற்பதற்காகவே இத்தனை ஆயத்தங்களும் செய்யப்பட்டன. எத்தனை ஆச்சரியம். கனம்பொருந்திய ஒருவர் வருகிறார் என்றதும், இதுவரை கணக்கெடுக்கப்படாத இந்தச் சூழல் விரைவு விரைவாக அழகுபடுத்தப்பட்டு, பாதைகள் செவ்வைபண்ணப் பட்டதை நினைக்கும்போது. ராஜாதி ராஜாவாகிய கிறிஸ்துவின் வருகைக்கு நாம் என்ன ஆயத்தம்செய்கிறோம் என்ற எண்ணம் நம்மைக் குற்றவாளிக் கூண்டிலேயே நிறுத்திவிட்டது. ஆனால், ஒரு வித்தியாசம். அந்தப் பிரமுகர் வருகைதரும் நேரம் குறிப்பிடவில்லையென்றாலும், வரப்போகும் திகதி அறிவிக்கப் பட்டது. அதனால், அந்தத் திகதியைக் குறிவைத்து, துரித கதியில் வேலைகள் நடந்தன. அந்த அவசர வேலையில் சில போலித்தனங்கள், நிறைவுபெறாத மறைவிடங்கள், பின்பக்க வேலை தாமதப்பட்டாலும், பூர்த்தியாகிய முன்பக்க அலங்காரங்கள் என்றும் வருகிறவர் நடந்துபோகக்கூடிய பாதைகள் என்று அடையாளங் காணப்பட்ட பகுதிகள் திருத்தப் பட்டதையும் கண்டோம்.

இதனால்தான் கர்த்தர் தமது வருகையைக்குறித்த காலத்தை மனிதருக்கு வெளிப்படுத்த வில்லையோ என்று எண்ணத் தோன்றியது. கிறிஸ்து வருவது நிச்சயம்; அவர் வரும் காலம் சமீபித்துவிட்டதற்கான அடையாளங்கள் நிறைவேறி வந்தாலும், அவர் வரும் நாளை எவரும் அறியார்கள். அவர் வரும் போது, எந்தவொரு போலியும் அவர் முன்னே நிற்கமுடியாது. மனிதக் கண்கள் காணாத அந்தரங்கத்தையும் அறிந்த கர்த்தருக்கு முன்னே யாரால் எதனை மறைக்க முடியும்? இன்று எத்தனை வாழ்வுகள் அவாந்தர



வெளிகளாக காட்சியளிக்கின்றன! வாழ்க்கைப் பாதைகள் சிதைவுண்டு கிடக்கின்றன! மேடுபள்ளம் நிறைந்த வாழ்க்கைப் போராட்டங்களால் தடுமாறி நிற்கும் மக்கள் எத்தனைபேர்! இவர்களைக்குறித்த பொறுப்பை விசேஷமாக இந்தக் கொண்டாட்ட காலங்களில் நாம் உணரவேண்டும். மேற்பூச்சான போலித்தனமான ஆயத்தங்கள் எதுவும் கர்த்தருடைய நாளில் சாம்பலாகிவிடும்.

யோவான் ஸ்நானன்கள் எழும்ப வேண்டும்: ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் இந்த உணர்வுகள் நமக்குள் எழுவது உண்டு. பின்னர் அது தணிந்துவிடுகிறது ஏன்? அறுவடைக்கு ஆட்கள் அதிகமதிகமாகத் தேவைப்படுவது நமக்குத் தெரியட்டும். கர்த்தருடைய பெயரில் தம்மை வளர்த்துக்கொள்கிறவர்கள் அல்ல; உண்மையுள்ள, கிறிஸ்துவை ஜீவனாகக்கொண்டு, கிறிஸ்துவுக்காய் தமது வாழ்வையே துச்சமாக எண்ணுகின்ற யோவான்ஸ்நானகன்கள் கர்த்தருக்குத் தேவை. வாழ்வையே பணயம் வைக்க நேரிடும் அந்த உன்னத பணிக்கு நம்மை அர்ப்பணிக்க நாம் ஆயத்தமா?

பிரியமானவர்களே, கிறிஸ்து வந்து பிறந்தார் என்று நடந்து முடிந்ததை நாம் நினைவுகூரும்போது, அவர் திரும்ப வருகிறார் என்ற செய்தியும் அறிவிக்கப்பட்டாக வேண்டும். இதற்காக இன்னுமொரு யோவான் ஸநானன் பிறந்து வரமாட்டான். நாமேதான் அதனை அறிவிக்கவேண்டும். இரட்சிப்பின் ஆறுதலின் செய்தியையும், நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பின் செய்தியையும் நாம் மக்கள் மத்தியில் விதைத்துத்தான் ஆகவேண்டும். எதிர்ப்புகளும் சோர்புகளும் வரத்தான் செய்யும். ஆனால், நமது எஜமானனின் பணியை நாம் செய்துதான் ஆகவேண்டும். ஆகவே, இந்த நாட்களில் மாத்திரமல்ல, "சமயம்வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணுவோமாக" (2தீமோ.4:2)

மக்களை அழிவினின்று காப்பாற்ற விரைவோமாக. கிறிஸ்துவுக்காக என்ன பணி செய்கிறோம் என்பதிலும், நமக்குள் இருக்கும் கிறிஸ்துவை நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, இந்த நாட்களைக் கர்த்தருக்காகப் பயன்படுத்துவோமாக. கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

CTS இன் முதலாம் தவணைக்கான பாடநெறிகள்

வேதாகமத்தில் வேரூன்ற, திருச்சபைக்கு அர்ப்பணிக்க, ஊழியத்திற்கு ஆற்றல்பெற.

நேர அட்டவணை: தவணை I

ஜனவரி – மார்ச் 2014

நேரம்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
காலை	சமகால சிந்தனையியல் முப.ப. 9:00-12:15 பிரியா ஹெரல்டு	படிப்பு முறைகள் முப.ப. 9:00-11:15 ஜொன்சன் சந்ரசேகர் / வேதாகம விளக்கவுரை (வியாக்கியானம்) முப.ப. 9:00-12:15 நெப்போலியன் பத்மநாதன்	நியாயாதிபதிகள் முப.ப. 9:00-12:45 குமார் சுப்ரமணியம் / ஓசேயா வேளை முப.ப. 10:45-11:45	வேதாகமத்தை கற்கும் முறைகள் முப.ப. 9:00-12:45 கிறிஸ்தாமணி செல்லையா / ஆதாகை வேளை முப.ப. 10:45-11:45	புதிய ஏற்பாட்டு பின்னணி முப.ப. 9:00-12:00 குமார் சுப்ரமணியம்
பிற்பகல்	ஏற்பாடுகளுக்கிடையிலான இலக்கிய நூல்கள் பி.ப. 2:00-4:00 யொஹான் கிருஷ்ணகுமார்	கிறிஸ்தவ உலக நோக்கை மேம்படுத்தல் பி.ப. 2:00-4:15 நெப்போலியன் பத்மநாதன்	அருட்பணியின் சரித்திரம் பி.ப. 1:30-3:45 ஜூலியன் தேவதாசன்	யாக்கோபு நிருபத்தின் கிறிஸ்தவ வாழ்வு பி.ப. 2:00-4:00 ஜெய் சுதாகர்	அருட்பணிக்கான அறிமுகம் பி.ப. 2:00-4:15 எஸ். கதிரேசப்பிள்ளை
மாலை	ஒருங்கிணைந்த சிறுவர் நலக்கல்வி பி.ப. 6:00-8:00 வனஜா ராஜ்குமார்	சீஷத்துவம் பி.ப. 6:00-8:15 கிறிஸ்துமணி செல்லையா (கொஸ்பல் ரொனக்களில்)	கிறிஸ்தவ ஊழியனின் வாழ்வும் பணியும் பி.ப. 4:00-6:00 விறிஸ்ரி பாலேந்திரன்	யாத்திராகமம் - உபாகமம் நூல்கள் பி.ப. 6:00-8:00 சுரேஷ் அப்பாத்துரை	


தயவுசெய்து அவகாசங்களுக்கு நுழையப்பட்டுள்ள பாடநெறிகள் நாங்களுடையாக காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம். பதிவுசெய்வதற்கு முன்னர் கல்லூரி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

கல்லூரி 11 – 15 வரையான கல்லாண்டுக்களில் பதிவுசெய்பவர்களுக்கு கட்டண சலுகைகள் உண்டு.

கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் முழுமையாகுதலுக்காக திருச்சபைக்கான வளமுகை

180 நூற்றாண்டு வீதி கொழும்பு 011 5524257 registrar@cts.lk www.cts.lk



ஆசாரிப்புக் கூடாரமும் தியான வாழ்க்கை முறையும்.

4

குத்து விளக்கு

குத்து விளக்குக்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இடையிலுள்ள தொடர்பை இப்பொழுது பார்ப்போம். குத்து விளக்கானது சபையின் ஏழு ஆவிகளைக் குறிக்கிறது (வெளி 1:14). இது தேவ ஆவியானவர்தாம் என்பதில் சந்தேகமில்லை. இதுவே ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடும் ஆவியான வரின் ஏழுவித உத்தியோகமாகும். அதாவது 'ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தை அருளும் ஆவியுமாகிய கர்த்தரு டைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்' என்பதாகும் (ஏசாயா 11:2). ஆவியானவர் கிறிஸ்துவை நமக்குக் காட்டுகின்றார். அவரால் மட்டுமே நாம் கிறிஸ்துவை அறிய முடியும்.

ஆசாரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் போது குத்துவிளக்கில் இருந்து மட்டுமே வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்கிறோம். வேறே ஒளி கிடையாது. இவ்வண்ணமே பரிசுத்தஆவியானவர் மூலமாகவே பரிசுத்த வேதத்தை அறிந்துகொள் கிறோம். வேதத்தை அறிவதற்காக வியாக்கியானப் புத்தகங்கள் எழுதியவர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அதன் ஏவுதலினாலேயே இதனைச் செய்துள்ளனர். நமக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் அளவிற்கு இவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு இருக்கிறார்கள். கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத் தும் பரிசுத்த ஆவியானவருக்கே நாம் கனத்தைச் செலுத்த வேண்டும். ஏனெனில், எழுதப்பட்ட வார்த்தையான பரிசுத்த வேதாகமத்தையும், ஜீவனுள்ள வார்த்தையாகிய கிறிஸ்துவையும் தெளிவாக விளக்கக்கூடியவர் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே!

'என் நாமத்தினாலே பிதா அனுப்ப போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற் றையும் உங்களுக்கு நினைப்பூட்டு வார்' என்று யோவான் 14:26 ல் இரட்சகர் குறிப்பிட்டதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து வைப் பற்றி நமக்கு விளக்கிக் காட்டுவதுடன் அவரைக் குறித்த பல உண்மைகளையும் நமது நினைவிற்கு கொண்டு வருகிறார். கிறிஸ்துவைப் பற்றி வேறுபல உண்மைகளையும் தூயஆவியான வர் நினைவூட்டுகிறார். இதனை கிறிஸ்து யோவான் 15:26 ல் குறிப்பிட்டிருக்கிறார். 'பிதாவினிடத் திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவி னிடத்திலிருந்து புறப்படுகிறவருமா கிய சத்தியஆவியான தேற்றரவா ளன் வரும்போது, அவர் என்னை குறித்து சாட்சிகொடுப்பார்' அவரைக் குறித்து சாட்சி கொடுப்பது மட்டுமல்ல, அவரை வெளிப்படுத்தி கிறிஸ்துவை நமது ஜீவியத்தோடு ஐக்கியப்படுத்துவார் என்பதை யோவான் 16:13-15 வரையுள்ள வசனங்களில் காணலாம். 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாயப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங் களை உங்களுக்கு




அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள். அதினாலே அவர் என்னுடையதை உங்களுக்கு அறிவிப்பார்' என்பதேயாகும்.

இன்னொரு முக்கியமான செய்தி எபேசியர் 1:17,18-ம் வசனங்களில் தரப்பட்டுள்ளது. 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமான வர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டு மென்றும், தாம் நம்மை அழைத்த தினாலே நமக்கு உண்டாயிருக் கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினு டைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாச முள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்' என்பதாகும்.

நம்மில் அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிறதில் முளையறிவுடன் திருப்தியடைகின்றனர். அவர் இவ்வுலகில் வசித்த விதத்தையும் அவ்வப்போது செய்த அற்புதங்களையும், போதனைகளையும் மட்டுமே அறிந்திருக்கி றோம். அதாவது வரலாற்றில் வந்த கிறிஸ்துவை மட்டும் அறிந்திருக்கிறோம். இதற்குமேல் கூடுத லாக நாம் அறிய வேண்டியிருக்கிறது.





முக்கியமாக அவரது உயிர்த்தெழுதலின் ஜீவனை ஒவ்வொருவரும் அறிந்து, அனுபவிக்க வேண்டும். நம்மில் பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பித்தாலன்றி உயிர்த்தெழுத லின் சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள முடியாது. பல்வேறு விஷயங்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவற்றின் சத்தியங்களை நமக்கு வெளிப் படுத்தி அதை நமது ஜீவியத்தில் பிரகாசிக்கச் செய்வது பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவர் துணை செய்தால் மாத்திரமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அதிகமாக அறியமுடியும்.

பிலிப்பியர் 3:10 இல் பவுல் அப்போஸ்தலன் 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியும்படிக்கு' எனக் கூறியுள்ளார். இந்த அறிவினை பரிசுத்தஆவியானவரின் வெளிப்படுத்திலின் மூலமாகவே நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

சபீகத்தப்பம் வைக்கப்பட்டுள்ள மேசை


பரிசுத்த ஸ்தலத்தில் சமூகத்தப்பம் வைக்கப்பட்டுள்ள மேசை வலது புறத்தில் இருந்தது. இம்மேசையும் இதில் வைக்கப்பட்டிருக்கும் அப்பங்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நமக்குக் காண்பிக் கின்றன. பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள குத்து விளக்கு எரிந்தால் தான் மேசையில் இருக்கும் அப்பங்களை நாம் காணமுடியும். இதிலிருந்து குத்து விளக்கான பரிசுத்த அவியானவரின் மூலமே நாம் கிறிஸ்துவின் தன்மையை யும், அழகையும், அருளையும் மாட்சிமையையும் காணமுடியும் என்பதே நாம் கற்றுக்கொள்கிற தெளிவான பாடம்.

யோவான் 6-ம் அதிகாரத்தில் கர்த்தருடைய ஆவியானவர் கிறிஸ்துவை ஜீவ அப்பமாக வெளிப்படுத்துகிறார். இவ்வதிகாரத் தில் நாம் விளங்கிக்கொள்வதற்கு கடினமான சில காரியங்கள் உண்டு. 'என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகி றவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்' என்றும் 'நானே வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்' நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே' என்றும் 'என்னைப் புசிக்கிறவன்

என்னாலே பிழைப்பான். வானத்தி லிருந்து இறங்கின அப்பம் இதுவே. இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போலல்ல. அவர்கள் மரித்தார்களே! இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் எவனோ அவன் என்றென்றைக்கும் பிழைப்பான்' என்றும் (யோவான் 6:51,54,57,58) குறிப்பிட்டிருக்கிறது. இவ்வசனங்களை நன்கு விளங்கிக்கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் துணை அவசியம்.

மேலெழுந்தவாரியாக இவ்வசனங் களைப் படித்துவிட்டு. இயேசுவின் சரீரத்தை எவ்வாறு புசிப்பது? இரத்தத்தை எவ்வாறு அருந்து வது? என்று நினைக்கின்றனர். ஆனால், கிறிஸ்துவோ இதை உவமையாகக் கூறினார். சரீரப் பிரகாரமாக அவரது மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தை பானம்பண்ணாமல் நாம் இதை விசுவாசத்தினாலே நிறைவேற்றுகி றோம். அதாவது அவராலே நாம் பிழைத்திருக்கிறோம். கருத்தை அறியாமல் மேலெழுந்தவாரியாகப் படிக்கும்போது இவ்வார்த்தைகள் மிகவும் கடினமாகத் தோன்றலாம்.

கிறிஸ்துவைப் பற்றி அன்றும் இன்றும் மாறுபாடான கருத்துகள் நிலவுகின்றன. சிலர் கிறிஸ்துவை நல்ல மனிதர், சிறந்த ஆசிரியர், தீர்க்கதரிசி, போதகர் என்று



கூறுவதுடன் நின்று விடுகின்றனர். அதற்குமேல் அவர்களால் எதையும் அறிந்துகொள்ள இயலவில்லை. வேறு சிலர் அவர் தேவனாகிய குமாரன் அதாவது தேவகுமாரன் என்றும் அவர் மனிதர் மத்தியில் வாசம்பண்ணுகி றார் என்றும் உண்மையை அறிந்துகொண்டுள்ளனர். இன்று நாம் அவரை அறிந்து கொண்டது போல அநேகர் அவரை தேவ குமாரனாக ஏற்றுக்கொண்டுள்ளனர். யோவான் 6-ம் அதிகாரத்தில் இயேசு தம்மைப்பற்றி கூறிய மேற்கண்ட காரியங்கள் முதலில் அவரது சீடர்களுக்குக்கூட விளங்கவில்லை. இயேசு அவர்க ளது ஐயத்தை நீக்கினார். அது நமது ஐயப்பாட்டையும் தெளிவின் மையையும் நீக்கி விடுகின்றது. இயேசு இரத்தத்தாலும், நரம்பா லும் உருவான அவரது சரீரத்தை உண்ணும்படி கூறவில்லை. தேவ வார்த்தையையே குறிப்பிடுகிறார்.

கிறிஸ்து தமது சீடர்களுக்கு 'ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் யாவும் ஆவியாகவும் ஜீவனாகவும் இருக்கிறது' என கூறியதிலிருந்து தேவ வார்த்தையே ஜீவனுள்ள இரத்தமாயும் மாம்சமாயும் இருக்கிறது. அதனை அருந்துங்கள் என்றே அவர் குறிப்பிட்டார் என்று அறிகிறோம்.

இதிலிருந்து நமது தியான வாழ்க்கையின், அதாவது வேத வாசிப்பின் சிறப்பை உணருகி றோம். தேவ வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதா யும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமுமாக இருக்கிறது என எபிரெயர் 4:12 ல் வாசிக்கிறோம். இவ்விதமாக ஜீவனுள்ள வார்த்தை எவ்விதமானது என்றும், நாம் எவ்விதம் அதனால் போஷிக் கப்பட வேண்டும் என்றும் போதித் தார். தேவவார்த்தையை நேசித்து, வாசித்து, விசுவாசித்து தியானித்து படிப்பதனால் நாம் போஷிக்கப் பட்டு வளர்ச்சியடைகிறோம்.


இரட்சகர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எனக்குச் சில தனிப்பட்ட கருத்துகள் இருக்கின்றன என்று கொள்வோம். எமது எண்ணத்தை யும் கருத்தையும் கேட்பவர்கள் விளங்கவும் உணரவும் கூடிய வார்த்தைகளால் வெளியிடும் போதே மற்றவர்களும் அவ்வார்த் தைகளால் ஈர்க்கப்பட்டு எனது எண்ணத்தையும் கருத்தையும் புரிந்துகொள்கின்றனர். இவ்வாறே இரட்சகரும் வேதாகமத்தின் மூலம் தமது வார்த்தைகளை நமக்கு அருளி தமது குணாதிசயத்தை யும், திட்டங்களையும் வெளிப் படுத்தினார். நாம் இவ்வாறு இரட்சகர் அருளிய வசனங்களை உள்ளத்தில் மனதாற ஏற்று தியானித்து போஷிக்கப்படும்படி பரிசுத்த ஆவியானவர் கிருபை செய்யும்போது பயனடைகிறோம். சரீரத்தை உணவு போஷிப்பது போல இவ்வசனங்கள் ஜீவனுள்ள தாயும் கிரியை நடப்பிப்பதாயும் மாறி நமது ஆத்துமாவைப் போஷிக்கின்றன.

இயேசு கிறிஸ்து தமது வாழ்க்கை யின் மூலமும் வார்த்தையின் மூலமும் கடவுளை நமக்கு வெளிப்படுத்தினார். தாமே தேவனுடைய வார்த்தை, இருவரும் ஒன்றே என்பதையும் உறுதிப்படுத்தினார். யோவான் 1:1ல் 'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆம் கிறிஸ்து தேவனோடிருந்தார். அவர் வார்த்தையாயிருந்தார், அவர் மாம்சமானார்.

ஏற்றவிதமாக உண்ணும் உணவு சரீரத்திற்கு உபயோகிக்கப்படுவது போல, வேதவசனத்தை சிந்தித்து தியானிக்கும்போது நம் ஆத்துமா பயனடைகிறது. அப்போது நாம் கிறிஸ்துவையும், தேவனுடைய சித்தத்தையும் அறிந்துகொள்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் அருளின்றி இவ்வசனங்களை அறிந்துகொள்ள முடியாது. எபேசியர் 1:17, 18-ம் வசனங்களில் 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து பரிசுத்த ஆவியானவரின் உதவி நமக்கு எவ்வளவாய் தேவை என்பதை அறியமுடிகிறது. பரிசுத்த ஆவியானவரின் துணையின்றி பரலோகக் காரியங்களில் ஒன்றையாகிலும் நாம் புரிந்துகொள்ள முடியாது.

அப்பொழுது தேவனுடைய சித்தத்தைச் செய்வது நமக்கு மிகவும் இலகுவான, இயல்பான வாழ்க்கையாகிவிடும். சத்திய வசனத்தைப் புசிப்பது உள்ளான மனுஷனுக்கு விருந்தாகும். அதாவது வாசிக்கிற வசனம், வெறுமனே மூளை அறிவாக நின்றுவிடாமல், நமது ஜீவியங்களை மாற்றவும், தேவன் நம்மூலமாய் கிரியை செய்யவும், தம்மை வெளிப்படுத்தவும் இடமளித்திட வேண்டும். இவ்வாறு நாம் ஆவிக்குரிய பெலனும், புஷ்டியும் வளர்ச்சியும் பெறுகிறோம்.

தூபபீடம்



பரிசுத்த ஸ்தலத்தில், பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்கும் திரைக்கு முன்னால், மூன்றாவதாக, ஒரு தூபபீடம் இருந்தது. இதன்மீது இரவும் பகலும் இடைவிடாது தூபம் எரிந்துகொண்டிருந்தது. இது ஜெபத்தைக் குறிக்கிறது. நமது வாழக்கையில் தூயஆவியானவரின் இடமும், செயலும், சிறப்பும் என்னவென்பதை நாம் அறிந்த பிறகு, தூயஆவியானவரின் துணையின்றி கிறிஸ்துவை நாம் விளங்கிக்கொள்ளமுடியாது.

குமாரனை வெளிப்படுத்துகின்றவர் ஆவியானவரே என உணர்ந்த பிறகு, கிறிஸ்துவைப் பற்றிய இவ் உண்மைகளையெல்லாம் நாம் விசுவாசிக்கிறபடியால், இப்போது நாம் மெய்யான, ஆவிக்குரிய ஜெப ஜீவியத்திற்கு ஆயத்தமாக, பெலனடைந்தவர்களாக இருக்கிறோம். இங்கு நாம் குறிப்பிடுவது மன்றாட்டு விண்ணப்பமாகும் - அதாவது, பிறருக்காக பண்ணும் ஜெபமாகும்.

நாம் தேவ சந்நிதானத்துக்குச் செல்வதற்கு புதியதும் உயிர் உள்ளதுமான ஒரே வழி கர்த்தர் இயேசு ஒருவரே என்பதை எபிரெயர் 10:19,20-ல் காணலாம். "ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதியதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, கிறிஸ்து மூலம் தேவ சந்நிதானத்தில் சேருவதற்கான வாய்ப்பினை பெற்றுள்ள நாம், மற்றவர்களுக்காக பரிந்துபேசி ஜெபிக்கும்படியாக கர்த்தருடைய சந்நிதியில் சேருகிறோம். இதுவே பரிந்து மன்றாடுதல் என்ற ஜெபத்தின் உண்மையான கருத்தாகும். எனவேதான், அப்போஸ்தலனான பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுவதாவது, "நான் பிரதானமாய் சொல்லுகிற புத்திய என்னவெனில் எல்லா மனிதருக்காவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகம் இல்லாத அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ள வராயிருக்கிறார்" என்பதாகும் (1தீமோ 2:1-4). வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறியுள்ள வண்ணமாக தியானித்த பின்பே, இவ்விதமாய் மன்றாட்டு ஜெபங்களை ஏறெடுக்கக் கூடியவர்களாக இருக்கிறோம்.

பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவா னென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். (1கொரி.9:24)

இப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல், எவ்வளவு அழகாக வாழ்க்கை ஓட்டப் பந்தயத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் என்று கவனியுங்கள். ஆம் நாம் ஒரு ஓட்டப் பந்தயசாலையில் நிற்கிறோம். நாம் இரட்சிக்கப்படும் போது நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தை ஆரம்பிக்கிறோம். நாம் எப்படி ஓட வேண்டும் என்பதை வேதாகமமும், ஊழியர்களும் நமக்குப் போதிக்கிறார்கள். இந்த ஓட்டப் பந்தயசாலையில் எண்ணற்ற விசுவாசிகளும், பக்தர்களும் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்.



புதுவருட நற்செய்தி

இலக்கை நோக்கி ஓடுங்கள்!

உலக ஓட்டப் பந்தயத்திற்கும் நமது ஓட்டப் பந்தயத்திற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. அதாவது உலகப் பிரகாரமான ஓட்டத்தில், முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வருகிறவர்களே பரிசைப் பெறுவார்கள். ஆனால் ஆவிக்குரிய ஓட்டப் பந்தயத்தில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று அல்ல, யார்யார் முடிவு பரியந்தம் தங்கள் இரட்சிப்பிலும் அழைப்பிலும் தங்களைக் காத்து ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிக்கிறார் களோ, அத்தனைபேரும் கர்த்தரிடமிருந்து பரிசைப் பெற்றுக்கொள்வார்கள்.

அநேகர் நோக்கமில்லாமலும், இலக்கு ஒன்றில்லாமலும், மிருகங்களைப்போல பறவைகள்போல அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நித்தியத்தைக் குறித்த அக்கறையே இல்லை. ஆனால் ஒரு கிறிஸ்தவன் தன்னை வேறு பிரித்தவனாக, தான் தேவனுக்கு முன்பாக ராஜாக்களிலும், ஆசாரியர்களிலும் ஒருவன் என்பதை உணர்ந்த வனாக செயல்பட வேண்டும். தேவன் தனக்கு நியமித்த ஒட்டம் ஒன்று உண்டு என்பதை மனதில்கொண்டு, அதை பொறுமையோடு ஓட ஆயத்தம் பண்ணி, முடிவில் ஜீவ கிரீடத்தைப் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன், இலக்கைய மைத்து தொடர்ந்து ஓடவேண்டும்.

சிலர் தங்கள் ஓட்டத்தை தடபடலாக ஆரம்பிக்கிறார்கள். ஆனால் ஓட்டத்தின் முடிவைக் குறித்த தரிசனம் அவர்களுக்கு இல்லாதபடியினாலே, திசை தப்பிப்போய் விடுகிறார்கள். ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தி னாலே முடிவு பெறப்போகிறீர் களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? (காலா.3:3) என அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியரைக் கடிந்துகொண்டார்.

சாலொமோன் ராஜா தன் ஓட்டத்தை மிகவும் பக்தியாய் ஆரம்பித்து, மகிமையான ஆலயத்தையும் கர்த்தருக்கென்று கட்டி, பிரதிஷ்டை நாளின்போது, மிக நீண்ட ஜெபமும் செய்தார். எல்லாம் நல்லதுதான். ஆனால் முடிவிலே அந்நிய ஸ்திரிகள் அவனை வழி விலகப்பண்ணி, கடைசியில் அந்நிய தெய்வங் களுக்கு மேடை கட்டுவதிலும், கோவில்களை அமைப்பதிலும் தன் நேரத்தை செலவழித்தார். கர்த்தர் பலமுறை எச்சரித்தும் சாலொமோன் செவிகொடுக்க வில்லை. எபிரெயர் 11வது அதிகாரத்தில் வரும் விசுவாச வீரர்களின் பெயர் பட்டியலில் சாலொமோனின் பெயர் இல்லை. பரீட்சையில் தோல்வியடைந்தார்.

அநேகர் பூமிக்குரிய நன்மை களையும், ஆசீர்வாதங்களையுமே எதிர்பார்த்து ஓடுகிறபடியால் பரலோக பொக்கிஷங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏசாவின் கண்கள் சிவந்த கூழைப்பெற்றுக் கொள்வதிலேயே இருந்தது. அதனால் அவன் சிரேஷ்ட புத்திர பாகத்தையும்,

தகப்பனின் ஆசீர்வாதங்களையும் இழந்தான். என்ன பிரயோஜனம்? வேதம் சொல்லுகிறது, பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள். அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான். (எபிரெயர்12:17).

பாதி வழியில் சாத்தான் உன்னை திசை திருப்ப முயற்சித்து, தடைகளைக் கொண்டுவந்து, தரிசனத்தை இழக்கச் செய்வான். அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கிறார், நீங்கள் நன்றாய் ஓடினீர்களே. சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? (கலா.5:7) ஓட்டத்தை ஓடுவதற்குத் தடையாக இருக்கும் காரியங்களை ஒதுக்கித் தள்ளுவதற்கு வேண்டிய பெலத்தை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள தினமும் அவரை நாட வேண்டும். ஓடுவதற்கு நன்கு பயிற்சி பெறவேண்டும்.

திருவசனத்தை ஒழுங்காகப் படித்து, அதை ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கிறவர்களாயிருக்க வேண்டும். ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 12:1-2) அவ்வாறே, நாமும் சிறப்பான ஓட்டத்தை நன்கு ஓடுவதற்கு தினந்தோறும் நாம் ஜெபிக்க வேண்டும். திருவசனமாகிய ஞான பாலை தினம் அருந்தவேண்டும். கர்த்தர் கொடுத்திருக்கும் தாலந்தை அவர் நாம மகிமைக்காகப் பாவித்து, அவரின் ஊழியத்தை ஆவலுடன் செய்யவேண்டும்.

இந்த ஓட்டம் கடினமானது என்று ஒருபோதும் சொல்லாதே. அநேக பரிசுத்தவான்கள், தீர்க்கதரிசிகள் இதே வழியாய் கடந்துசென்று, தங்கள் ஓட்டத்தை முடித்து இன்று ஆகாய மண்டலத்திலே நட்சத்தி ரங்களைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். (தானியேல் 12,3,4). அவர்களின் ஜீவியமும் நம்மை உற்சாகப்படுத்தி, தட்டி எழுப்புகிறதாக இருக்கிறது. நமது அருமை இரட்சகரும் இதே பாதையில் தனது ஓட்டத்தை ஓடினார். விசுவாசத்தைத் துவக்கு கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபிரெயர் 12:1). இன்றே இயேசுவை நோக்கிப் பார்க்க ஆரம்பிப்போம். இந்தப் புதிய ஆண்டில், இதுவரை இரட்சிக்கப் பட்டும் ஆவிக்குரிய ஓட்டத்தில் இறங்காதவர்களாக இருக்கின் றீர்களா? இப்போதே மனந்திரும்பி, இயேசுவை சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டவர்களாக உங்களுக்கென நியமிக்கப்பட்டு உள்ள ஓட்டத்தை ஓடத் தொடங்குங்கள். ஒருவேளை, இயேசுவை நோக்கி ஓட ஆரம்பித்து, இடையில் விழுந்துபோய் ஓட்டத்தை நிறுத்தியிருப்பவர்களாக இருக்கின்றீர்களா? இப்போதே விழுந்த இடத்திலிருந்து எழும்பி, இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி (வெளி.2:5) இயேசுவை நோக்கிப் பார்த்தவர்க ளாக தொடர்ந்து ஓட முயற்சியுங் கள். மனதிலும், இருதயத்திலும், ஓட்டத்தை பொறுமையோடே ஓடி முடிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் ஓடுங்கள். இலக்கை நோக்கி தொடருங்கள். கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். கர்த்தர் உங்களுக்கு தமது கிருபையை அருளுவாராக!





வாழ்க்கையில் நாம் பலவிதமான காரியங்களை அருமையாக முழுமையாக நாம் அனுபவிக்கின்றோம். பலவிதமான உணவுகளை உட்கொள்ளுகி றோம். பலவித விதமான உடைகளை அணிகிறோம். பலவிதமான நபர்களோடு பழகுகிறோம். ஆயினும் விருப்பமான உணவு எது? பிடித்த நிறம் எது? இப்படி கேள்வி கேட்கப்படும்போது நாம் ஏதேனும் ஒன்றையே பதிலாக சொல்வோம். "இன்ன நிறம் எனக்குப் பிடிக்கும்" அல்லது "இதுதான் எனக்குப் பிடித்த சாப்பாடு" என கூறுவோம். இதற்கு காரணம் என்ன? அதனை நாம் ருசிபார்த்திருப் பதினால் அல்லவா!

இதேபோல் வாழ்வில் மிக முக்கியமான ஒன்று நட்பாகும். ஒவ்வொரு நபர்களுக்கும் தமது வாழ்க்கையில் குறிப்பிட்ட ஒருவரை உற்ற நண்பனாக சுட்டிக் காட்டமுடியும். நட்பு இனிமையானது என்பது உலகறிந்த உண்மை. "உன் நண்பன் யார் என்று சொல். நீ யார் என்று நான் சொல்லிவிடுவேன்" என்கிறது ஒரு பழமொழி. சிலரை அவர்களுடைய நண்பர்களை வைத்தே அவர் இப்படிப்பட்டவர் என்பதைக் கண்டு பிடித்துவிடலாம். உன்னுடைய நண்பன் யார்? உண்மையில் நண்பர்கள் நம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

உன் நண்பர்கள் தங்களுக்கேற்ற படி உன்னை மாற்றிவிட முற்படு வார்கள். ஆகவே, உன் நண்பன் யார்? யாரை நீ உன் நண்பனாக தெரிந்தெடுக்கப்போகின்றாய் என்பதில் நீ மிகவும் கவனமாய் இருக்கவேண்டும். ஏனெனில் நண்பர்களால் உன் வாழ்க்கை சீரழியவும்கூடும். அல்லது செழிப்ப டையவும் கூடும். நமது வாழ்வில் நல்ல நண்பர்கள் நம் ஒவ்வொரு வருக்கும் தேவை. அவர்களின் நட்பைக் காட்டிலும், அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கின் றார்கள் என்பது தான் மிகமிக முக்கியமான காரியமாகும். நல்ல நண்பன் நம் ஒவ்வொருவருக்கும் தேவை! "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்." (நீதிமொழிகள் 17:17).

இரு கிறிஸ்தவ நண்பர்கள் ஒன்றாக கல்லூரியில் படித்தனர். அவர்களது கடைசி இறுதித்தேர்வு எழுதிய பின் அவர்கள் இருவரும் பிரிந்து செல்லும் தருணம்வந்தது. அந்தக் கடைசி நிமிடத்தில் தன் சக நண்பனுக்கு இப்படியாக ஒருவன் "ஆட்டோகிராப்" எழுதிக் கொடுத்தான். "என் நண்பனே! என்னுடன் சேர்ந்து நீ பல நாட்களாக ஜெபித்திருக்கிறாய்! விளையாடியிருக்கிறாய். சண்டை பிடித்திருக்கிறாய். சமாதானமாகி இருக்கிறாய்! ஆயினும் நாம் பிரிகின்றோம். எனினும், என் நண்பனே, என் உற்ற நண்பனை நீ கடைசிவிரை மறந்துவிடாதே! அவரை நீ அறிவாய்!" இப்படிக்கு உன்னுடைய உயிர் தோழன் என்று தன்னுடைய சொந்தக் கையொப்பத்தையிட்டு தன்னுடைய சக கிறிஸ்தவ கல்லூரித் தோழனுக்கு எழுதிக்கொடுத்தான். பின்னால் சிறுகுறிப்பு: "உன் நண்பனாகிய எனது உற்ற நண்பன் இயேசு கிறிஸ்து என்பதை நீ அறிவாய்" என்று இருந்தது.

ஆம். ஒருவன் இயேசு கிறிஸ்துவை தன் நண்பனாகப் பெற்றிருந்தால், அவரை தன் நண்பனுக்கும் அறிமுகம் செய்பவனாக இருப்பான். நண்பர்கள் ஒருவரை ஒருவர் தாங்கவும் உதவசெய்யவுமே இருக்கின்றார்கள். நண்பர்கள் தங்கள் நட்பை இரகசியமாக மட்டும் தொடர மாட்டார்கள். ஊரே அறிய நட்பாக இருப்பார்கள். தங்கள் நட்பிற்காக உயிரையும் கொடுக்க விரும்புவார்கள். அப்படியாயின், இன்றே உனது நண்பனுக்கு இயேசுவை அறிமுகப்படுத்து வாயா? நீயும் அவரை உனது உற்ற நண்பனாக ஏற்றுக்கொண்டு அவரோடு பழகிப்பார். நீயே

ஆச்சரியப்படும்படி உன் வாழ்க்கை இனிமைமிக்க ஒன்றாகும். நீ உனது வாழ்க்கையில் என்றென்றும் மாறாத இனிய நட்பினை கண்டிடுவாய்!



என்றைக்காவது உன்னைப் படைத்த கடவுளிடம் நீர் நண்பனாக பழகமுடியும் என்று நினைத்துப் பார்த்திருக்கின்றாயா? கடவுளைப்பற்றி சிந்திக்கும் போதெல்லாம் அவரைத் தெய்வமாகவும், இராஜாவாகவும் உலகைப் படைத்தவராகவும் நம்மை சிருஷ்டித்தவராகவும் நீதிபதியாகவும் நாம் எண்ணுகிறோம். இன்னும் சிலர் அவரை காப்பவனாக தீயோரை அழிப்பவனாக உருவாக்குபவனாக எண்ணுகின்றனர். இன்னும் சிலர் அவருக்கு பயந்து அஞ்சி நடுங்குகின்றனர். ஆனால் அவரிடம் நீ ஒரு நண்பனாக பழகமுடியும் என்ற எண்ணம் ஏற்படாதல்லவா. ஆனால், நாம் தேவனோடு நண்பர்களாக இருக்க முடியும் என்று வேதாகமம் தெளிவாக சொல்லுகின்றது. ஆகவே சற்று இங்கு நில்!

ஒவ்வொரு நாளும் சற்று அமர்ந்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நீ வாசித்துப்பார்! அதை தொடர்ந்தும் வாசித்துக் கொண்டிரு! நீ நிற்க வேண்டிய இடம் அதுவே! வேதாகமத்திற்கு முன் நீ நின்று பழகு. நீ கடவுளுடன் நட்புடன் பழக அது உன்னை பயிற்றுவிக்கும்.

யாக்கோபு 2:23 ல் ஆபிரகாம், தேவனுக்கு சிநேகிதன் எனப்பட்டான்.

யாத்திராகமம் 33:11 ல் சிநேகிதனுடன் பேசுவதுபோல தேவன் மோசேயுடன் பேசினார்.

மத்தேயு 11:19, லூக்கா 7:34 ல் இயேசு பாவிகளுக்கும் ஆயக்காரருக்கும் சிநேகிதர் எனப்பட்டார்.

யோவான் 11:11 ல் இயேசு லாசருவை சிநேகிதன் என்றார்.

இயேசு தன்னைக் காட்டிக் கொடுக்க வந்த சீடனான யூதாஸ் காரியோத்தையும் பார்த்து இப்படிக் கேட்டார். "சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்" என்று மத்தேயு 26:50 கேட்டார்.

அதுமட்டுமல்ல, அவர் தம் அனைத்து சீடர்களையும் பார்த்து, "நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்லுகிறதில்லை. உங்களை சிநேகிதர் என்கிறேன்" (யோவான் 15:15) என்று உரிமை யோடு கூறினார். அவ்வாறே, இயேசு தம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை சீஷர்கள் உணர்ந்தே இருந்தனர்.

இந்த சிநேகத்தினைப் பற்றி வாசிக்கும் போதெல்லாம் ஆண்டவரோடு நண்பனாக நீயும் நானும் பழக எவ்வளவு ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நீ உணர்கின்றாயா? ஆம், ஆண்டவர் எம்மோடு நண்பனாய் பழக எப்பொழுதும் ஆயத்தம் உள்ளவராகவே இருக்கின்றார். "நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 1:1) இது மாபெரும் உண்மையாகும்.

தேவன் தாம் படைத்த ஏதேன் தோட்டத்தில், தாம் படைத்த ஆதாமோடும் ஏவாளோடும் நட்போடு பழகிவந்தார். ஆயினும் ஆதாமும் ஏவாளும் தமது கீழ்ப்படியாமையினால் அந்த நட்பினை விரைவில் உடைத்தனர். இன்றும் உலகில் பலர், இறைவனோடுள்ள நட்பை உதாசீனம் செய்தே வாழுகின்றனர். நீயும் நானும் என்னச் செய்யப் போகின்றோம்? நீயும்கூட ஆண்டவரோடு நண்பனாக பழக வேண்டுமென்றே வேதாகமம் போதிக்கின்றது. அவரை உனது உற்ற நண்பனாக ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் உன் கையிலே தான் இருக்கின்றது!



உன் நண்பர்களுடன் நீ எவ்வாறெல்லாம் தொடர்பு கொள்கிறாய்? அடிக்கடி, கடிதத்தினூடாக, தொலைபேசி யினூடாக, முகநூலினூடாக அவர்கள் பேசுவதைக் கேட்கின்றாய் அல்லவா. கடவுளோடு நண்பனாக பழக வேண்டும் என்ற எண்ணம், உன் உள்ளத்தில் இருக்குமாயின், நீ வேதத்தை தினமும் வாசிக்கலாமே. அவருடைய குரலை தினமும் கேட்க ஆரம்பிக்கலாமே. நீ பழக விரும்பும் நண்பனோடு

ஒவ்வொருநாளும் எவ்வளவு நேரம் செலவிடுவாயோ, அதுபோல நீ கடவுளோடு நேரத்தை செலவிட ஆரம்பிக்கலாமே. அப்படி நீ ஆண்டவருடன் செலவிடும் நேரமானது அவரோடுள்ள உன் உறவினை வளர்க்கும். அவருக்கு முன்பாக நீ அமைதியாக இரு. அவரிடம் ஜெபி. அவர் சொல்ல விரும்புவதை கேட்க முதலில் வேதத்திற்குச் செவிகொடு.

நீ எப்படி உன் நண்பன் முன்பாக மௌனமாய் இருப்பாயோ அப்படியே செய். நாட்கள் செல்லச்செல்ல நீயே அந்த அற்புதமான நட்பில் ஆனந்தம் அடைவாய். நீதிமொழிகள் 6:4யை வாசித்து பார். அதன்படி நீ அவரிடம் உனக்கு அவசிய மானதை கேள். உனக்கு என்ன தேவையோ அதை உன் நண்பன் உனக்கு தரமுடியும் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்.

இவ்வுலகில் சகல சூழ்நிலைகளி லும் உண்மையாக நேசிக்கக் கூடிய சகநண்பர்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. ஆயினும் யோவான் 15:13 ன் படி உனக்காக ஜீவனைக்கொடுத்த அவருடைய அன்பிலும் மேலான அன்பு இவ்வுலகில் இல்லை. நீதிமொழிகள் 18:24 கூறுகின்றபடி, உன் சகோதரரிலும் அதிக சொந்தமாய்ச் உன்னை நேசிக்கும் சிநேகிதர் கிறிஸ்து ஒருவரே!



நமது நட்பிற்கும் அதன் வளர்ச்சிக்கும், நாம் நண்பர் களுடன் செலவிடும் நேரம் மிக முக்கிய பங்காற்றுகின்றது. அதுபோலவே கடவுளோடு உன் நட்பு ஆரம்பமாகவும் அதிலே நீ வளரவும் வேண்டுமானால் நாம் அவரோடு உன் தனிமையில் நேரம் செலவிட பழகவேண்டும். உன் நேரத்தை கடவுளுடன் செலவிடு. அவரது வசனத்துடன் பழகு. அவரது சத்தத்தைக் கேட்க பழகிக்கொண்டே இரு. எப்படி என்று கேட்கின்றாயா? மிகவும் சுலபமான வழியொன்றைக் கூறுகின்றேன். நீ உன் வேத புத்தகத்தை எடுத்துக்கொண்டு மிகவும் அமைதியான ஓரிடத்திற்குச் செல். மிக முக்கியமாக யாரும் உன்னை தொந்தரவு செய்யாத இடமாக அது இருக்கட்டும். அந்த இடத்தில் இருந்துக்கொண்டு நீ கடவுளிடம் எதைச் சொல்ல விரும்புகின்றாயோ அதைச்சொல்! அதன் பின் உன் வேதாகமப் புத்தகத்திலிருந்து ஒரு சில பகுதிகளை எடுத்து வாசி. அந்த வேதப்பகுதியில் அவர் உனக்கு வைத்திருக்கும் திட்டத்தினை உன்னால் புரிந்துகொள்ள முடியும். உனக்குத் தேவையான உதவிகளை, வழிநடத்துதலை, ஞானத்தை அவரிடமே கேள். அத்துடன் நின்றுவிடாமல் அந்த நாள்முழுவதும் கடவுளோடு உன் தொடர்பினை வைத்துக்கொள். அடிக்கடி அவரிடம் பேசு. இடை விடாமல் அவரின் பிரசன்னத்தை கொண்டிருக்க முற்படு.

வானொலி நிகழ்ச்சிகள்

- SLBC வர்த்தகசேவையில் ஞாயிறு 5:30 pm மணிக்கு தீபம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.
- FEBA 1125 hz இல் காலை 6.00 am (திங்கள், செவ்வாய் நாட்களில்) வேதபாடங்கள் ஒலிபரப்பாகின்றன.
- யாழ் FM ல் 7.15 pm திங்கள் முதல் சனி வரை திருமறைக்குத் திரும்புவோம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.



ஒருவேளை நீ அலுவலகத்தில் தொழிலில் ஈடுபடக்கூடும். பாடசாலையிலோ, சந்தையிலோ, பிரயாணப்பட்டு போகும்போதோ, வரும்போதோ எப்பொழுதும் ஆண்டவரோடு உன் பழக்கத்தை வைத்துக்கொள். எப்பொழு தெல்லாம் அவரிடம் பேச விரும்புகின்றாயோ, அப்பொழு தெல்லாம் அவரது சமுகத்தை நாடி ஓடு. எப்படி இதைச் செய்வது என்று நீ எண்ணக் கூடும். நான் கூறுவதெல்லாம் உன் இருதயத்தில் அவரோடு நாள்முழுவதும் பேசிக் கொண்டே இரு என்பதுதான்.

நீ வாசித்த வேத பகுதிகளையும் உனக்குப் புரிந்த உண்மைகளை யும் உனக்கு நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அசைப்போட்டுக் கொண்டே இரு. நன்மையான வற்றை சிந்தி. தீமையானவற்றை விட்டுவிட தீர்மானம் செய். இந்தத் தொடர்பு இன்னும் இன்னும் தொடரத் தொடரதான் ஆண்டவரோடுள்ள உன் நெருக்கம் அதிகரிக்கும். அவரோடுள்ள நட்பும் பழக்கமும் ஐக்கியமும் மென்மேலும் வளரும்.

அவருடனான நட்பை நீ பெலப்படுத்திக் கொள்ளும்போது, அது உன் வாழ்வில் நீ தாண்ட வேண்டிய மைல்கற்களை தாண்டிட உரிய பெலனைக் கொடுக்கும். அவருடைய ஆலோசனைகளின்படி நீ நடக்கும்போது, நீ ஆண்டவருக்கு இனிய நண்பனாக மாறிக் கொண்டே இருப்பாய்.

அவரும்கூட உனது இனிய நண்பனாகவே இருப்பார்.

லூக்கா 16:9-17 வரையுள்ள வசனத்தில் இயேசு இப்படிக் கூறுகின்றார், 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்.

கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயி ருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப் பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மை யுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது'' என்றார்.



இதை மனதில் பதி.

பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள், தங்கள் பாடங்களில் சில கடினமான வரிகளை மனப்பாடம் செய்வது வழமை. கணக்கில் சில சூத்திரங்களும் விஞ்ஞான குறியீடுகளும் அப்படியே மனனம்செய்து விடுவது படிப்பிற்கு உதவியாக இருக்கும். அவ்வாறே வேதாகமத்தில் உனக்குப் விருப்பமான பகுதிகளை மனப்பாடம் செய்துகொள். அப்பொழுது உன்னுடைய நட்பு உன் நண்பனுக்கு விசுவாசத்தை உண்டுபண்ணும்.

நல்ல நண்பர்கள் ஒவ்வொருவரில் ஒருவர் நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பார்கள் அல்லவா?

தேவனுடன் நட்பைப் பேண விரும்புகின்றவன், அவருடைய வார்த்தைக்கு அதிக கனத்தைக் கொடுப்பானல்லவா?

அவருடைய வார்த்தையைப் பெற்றிருப்பவன் பெரும் செல்வத்தைக் கண்டவனாவான். எனவே நீ மிக முக்கியமான காரியத்தை செய்தாக வேண்டும். உன் நண்பன் உன்னுடன் பேசும் வார்த்தைகளை மறந்து போகாமல் மனதில் பதித்து வைத்திருக்க வேண்டும்.

இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன் (மத்தேயு 28:20) என்றார் இயேசு. முடிவுபரியந்தம் அவருடைய வார்த்தைகளில் நிலைத்து நிற்பவனே இரட்சிக் கப்படுவான் என மாற்கு 13:13 கூறுகின்றது. ஆகவே, இதை வாசிக்கும் இனிய நண்பர்களே, உற்ற நண்பனான கிறிஸ்து இயேசுவை ஒருபோதும் தவிர்த்து வாழவேண்டாம்!

அவரே உன்னை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

இரண்டு விதமான ஜெபம்

"அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார். இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக் கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிற வனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்.18:10-14).


தேவாலயத்திற்கு ஜெபிக்க சென்ற இரண்டுபேரில் ஒருவன் பரிசேயன். இந்த பரிசேயன் பக்திநெறி கோட்பாடுகளைக் கற்று அதில் சிறந்தவனாக இருந்தான். அவைகளைத் தவறாமல் கைக்கொள்ளுகிறவனாகவும் இருந்தான். இந்த பரிசேயர்கள், "தங்களை மட்டுமே கர்த்தர் அழைத்திருக்கிறார்" என்றும், "தாங்கள்தான் பரிசுத்தவான்கள்" என்றும், "பக்திக்குரியவர்கள்" என்றும் தைரியமாக பறைசாற்று கிறவர்களாக இருந்தனர்.

தேவாலயத்திற்கு ஜெபிக்க வந்த மற்றொருவன் ஆயக்காரன். இந்த ஆயக்காரர்கள் மற்றவர்களால் பாவிகள் என்று எண்ணப்பட்டனர். "இவர்கள் பாவிகள்" என்று எண்ணப்படுகிறவர்களுக்கு அக்காலத்திலே பலவிதமான கருத்துக்கள் உண்டு. பாவம் செய்கிறவர்களையும் பாவிகள் என்று கருதினர். ரோமர்களிடத்தில் வேலை செய்தவர்களையும் அவர்களோடு பழகினவர்களையும் இந்த பக்திமான்கள் பாவிகள் என்றே கருதினர். ஆயக்காரர்கள் ரோமர்களுக்காக யூதர்களின் மத்தியிலே வரிவசூலித்தபடியால், ஆயக்காரர்களை பக்தியற்ற வர்கள், பாவிகள் என்று பரிசேயர்கள் கருதினார்கள்.

பரிசேயனும் இந்த ஆயக்காரனும் யூதர்களாயிருந்தனர். இரண்டு பேரும் தேவாலயத்திற்கு ஒரே தேவனை வணங்கும்படி செல்லுகிறார்கள். தேவாலயத் திற்கு சென்ற பரிசேயரின் நோக்கமும் ஒன்றுதான், ஆயக்காரனின் நோக்கமும் ஒன்றுதான். இரண்டு பேருமே ஜெபிப்பதற்காகத்தான் தேவாலயத்திற்கு சென்றனர். பரிசேயன் ஜெபிக்கும்போது, "தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போல வும், இந்த ஆயக்காரனைப்போல வும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றான்.

இந்த பரிசேயன் தன்னை தேவ சந்திதானத்திலே வைத்து தேவ நீதியின் அடிப்படையிலே தன்னை பரிசோதிக்காதபடி தன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அதினால்தான் "நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றான்.


இரண்டாவதாக, இந்த பரிசேயன், வாரத்திலே இரண்டுதரம் உபவாசிக்கிறேன், ஒழுங்காக தசமபாகம் கொடுக்கிறேன் என்கிறான். தன் நற்கிரியைகளை ஆண்டவர் மறந்து விட்டாரோ என்று எண்ணி அவருக்கு ஞாபகப்படுத்துவதைப்போல இதைச் சொல்லுகிறான். இதன்



பொருள் என்னவென்றால், தனது நற்கிரியைகளினாலே அவரோடு உறவு வைப்பதற்கு தான் தகுதி படைத்தவன் என்கிற உரிமையை கோருகிறான். நற்கிரியைகளி னாலே நாம் ஒருபோதும் மீட்கப்படுவதில்லை என்று வேதம் தெளிவாக நமக்குக் கூறுகிறது.

அப்படியானால் நாம் எவ்வாறு மீட்கப்படுகிறோம்? இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் கிருபையினாலும் விசுவாசத்தினா லும் மட்டுமே நாம் மீட்கப்படுகி றோம். விசுவாசத்தினாலும், கிருபையினாலும் மீட்கப்பட்ட நாம் நற்கிரியைகளைச் செய்ய கடனாளிகளாயிருக்கிறோம் என்று வேதம் போதிக்கிறது. ஆனால் இந்த பரிசேயன், தனது நற்கிரியைகளை உரிமை பாராட்டி ஆண்டவரிடத்திலே ஆசீர்வாதம் பெற விரும்பினான்.

ஆனால் ஆயக்காரன் அப்படியல்ல, தன் கண்களை வானத்திற்கு ஏறெடுத்துப் பார்க்கத் துணியவில்லை. வானம் என்பது தேவனுடைய சிங்காசனமாகவும், பூமி அவருடைய பாதபடியாகவும் இருக்கிறது. அவன் வானத்திற்கு




கவி. சுசி பிரபாகரதாஸ்

நேராக சிங்காசனத்தைப் பார்க்க துணியாதபடி, பூமிக்கு நேராக தன் தலையைத் தாழ்த்தி மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று சொன்னான்.

தேவனுடைய அளவுகோலான தேவநீதி, தேவ பரிசுத்தத்திற்கு முன்பாக நிற்க தான் தகுதியற்றவன், தான் ஒரு பாவி என்பதை உணர்ந்தவனாக, "தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று அருமையான ஒரு சுருக்கமான ஜெபத்தைச் சொன்னான். இந்த ஆயக்காரன் தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த பரிசேயனைப் பார்க்கவில்லை. பக்கத்திலிருந்த வேறு எவரையும் பார்க்கவில்லை. பிறருடன் தன்னை ஒப்பிடவும் துணியவில்லை. தன்னை தேவனுக்கு முன்பாக மாத்திரம் அவன் மறுமதிப்பீடு செய்து, தான் "பாவி" என்பதை உணர்ந்து, அவன் தன் மார்பிலே அடித்துக்கொண்டு ஜெபித்தான்.

பரிசேயனுடைய ஜெபத்தைக் கவனித்துப் பாருங்கள், அவன் தனக்குள்ளே ஜெபித்தான். ஆயக்காரனோ பாவ உணர்வடைந்தவனாய் தனது மார்பிலே அடித்துக்கொண்டு சத்தமாக ஜெபித்தான். வேதம் சொல்லுகிறது, "ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய் சென்றான், பரிசேயன் எப்படி வந்தானோ அப்படியே சென்றான்." இந்த உவமையின் நடுமையக் கருத்து என்னவென்றால், தங்களை நீதிமான்கள் என்று எண்ணி மற்றவர்களை அற்பமாக எண்ணக்கூடாது என்பதாகும் (லூக்கா 18:9).

இதை வாசிக்கும் அருமையான சகோதரனே, சகோதரியே



உன்னை நீதிமானாக நீ மதிப்பிடாதே. ஆண்டவர் உன்னை நீதிமான் என்று அழைக்க வேண்டும், அல்லது நீ நீதிமான் என்று மற்றவர்களால் அழைக்கப் படவேண்டும். இந்த பரிசேயனோ தன்னை நீதிமான் என்று எண்ணினான், மற்றவர்களை அற்பமாக எண்ணினான். "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்" (லூக்கா 18:14).

எவருக்குள்ளே தன்னை உயர்த்துகிற எண்ணம் வருகிறதோ, அப்பொழுது மற்றவர்களை அற்பமாக எண்ணுகிற மனப்பான்மை அவர்களுக்குள்ளே வருகிறது. நீங்கள் உங்களை உயர்த்திக் கொண்டு பிறரை அற்பமாக எண்ணுகிறீர்களா? வேதத்தை நீ முழுமையாக வாசித்தால் அற்பமாக எண்ணப்பட்டவர்களைக் குறித்து பார்க்கிறோம்.

பழைய ஏற்பாட்டிலே ராகேல் லேயாளை அற்பமாக எண்ணினாள். ஏன்? அவள் கூச்சப்பார்வையுள்ளவளாய் இருந்தாள். அதே சமயத்திலே நீங்கள் வேதத்திலே பார்த்தால்,

பரிசேயன் ஆயக்காரனை அற்பமாக எண்ணினான். யாக்கோபு 2ஆம் அதிகாரத்திலே ஏழைகளை பணக்காரர்கள் அற்பமாக எண்ணியதைக் குறித்து யாக்கோபு குறிப்பிடுகிறார். சபையிலே பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்த ஐசுவரியவான்களை உயர்ந்த ஸ்தானத்திலே வைத்தார்கள். ஏழையைப் பார்த்து அங்கே நில் என்று சொன்னார்கள். இதை யாக்கோபு கண்டிக்கிறார்.

வஸ்திரத்தின் அடிப்படையிலும், பணத்தின் அடிப்படையிலும் அழகின் அடிப்படையிலும் நாம் பிறரை அற்பமாக எண்ணுகிறோம். ஆன்மீக அடிப்படையிலும்கூட பிறரை அற்பமாக எண்ணுவது உண்டு. இவ்வாறு பிறரை அற்பமாக எண்ணுவதின் மூலகாரணம் என்ன? நமக்குள் இருக்கிற பெருமையாகும். நம்மை நாமே உயர்வாக எண்ணுவதி னால்தான் நாம் பிறரை அற்பமாக எண்ணுகிறோம். நம்மை தாழ்த்தினால் பிறரை அற்பமாக எண்ண மாட்டோம்.

இங்கே ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டவனாக வீட்டிற்கு சென்றான். பரிசேயனோ எப்படி வந்தானோ அப்படியே சலனமில்லாமல், மாற்றமில்லாமல் எந்த வித்தியாசமுமில்லாமல் கடந்துபோனான். நீங்கள் தேவ சந்நிதானத்திலே எப்படி பிரார்த்தனை செய்கிறீர்கள்? உங்கள் ஜெபம் மற்றவர்களை குறை சொல்லுகின்றதாக இருக்கிறதா? அல்லது ஜெபத்தில் மற்றவர்களை நம்மோடு ஒப்பிட்டு, எம்மைச் சிறப்பானவர்களாக அளவீடு செய்கிறோமா? அல்லது மற்றவர்களைக் காட்டிலும் நாம் மிஞ்சின நீதிமான் என்று பெருமைப்படுத்துகின்ற ஒரு ஜெபமாக இருக்கின்றதா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

நம்மை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாக எண்ணுகிற அந்த தவறை நம்மைவிட்டு எடுத்துப்போடும் படியாகவும் தாழ்மையாயிருக்க பெலன் தரும்படியாகவும் ஜெபிப்போம். அப்படி ஜெபிப் போமானால், இந்த உவமையை நமது வாழ்வில் நாம் நடைமுறைப்படுத்துகிறவர்களாய் இருப்போம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஒளியை நோக்கி

கானகக் கடலில் காரிருள் உறையும்
கிளைகளின் அசைவில் வெள்ளொளி மிளிரும்
கதிரவன் வரவால் மொட்டுக்கள் அவிளும்
கண்கள் ஒளியினைக் கண்டதும் மகிழும்

ஒளியினை நோக்கியே இறைபணி தொடரும்
வழியினைத் தேடியே விழிகளும் இருளும்
அழிவினைச் சுமந்தே நிமிடங்கள் நகரும்
அழியாத வாழ்வுக்காய்த் தேவன்பு மலரும்

பாவிகள் வழியிலே படுகுழி தோன்றும்
தாவிடும் ஆத்துமா மரணத்தில் ஊன்றும்
சாவிலும் வாழ்விக்கும் இறைவார்த்தை என்றும்
காவிடுங் கழுகெனத் தேவருள் தோன்றும்

இன்னலில் மிதக்கும் ஏழையின் இதயம்
இன்பம் காணுமோ என்றோ உதயம்
துன்பம் சகிக்கும் துயவர் நெஞ்சம்
ஏன்றும் சுமக்கும் இறைக்குள் துஞ்சும்

மரணத்தின் விளிம்பில் மாந்தரின் நெஞ்சம்
கரங்கூப்பித் தேடும் இறைவனின் தஞ்சம்
இருளினிற் பரவும் சிற்றொளிக் கஞ்சும்
சிறுபூச்சி போலவே கிருபைக்குக் கெஞ்சும்

வழிப்பறியன்ன வதிர்ச்சிகள் தொடரும்
களியாட்டஞ் சுயநலம் நனவினிற் படரும்
களிகூர் நிமிடங்கள் மாயையாய்த் தளரும்
ஒளியினைத் தேடியே வாழ்க்கையும் நகரும்

மன்னுயிர் மீட்டிடத் தன்னுயிர் தந்தவர்
மண்ணிலே செந்நீர் முழுதுமா யீந்தவர்
கன்மலைமீதி லொளியென வந்தவர்
மன்னவர் இயேசு நமக்கெனப் பிறந்தவர்

கயவரை நேசித்து இதயத்தை வெல்வோம்
காயங்கள் கட்டிடுங் கிருபைக்குட் செல்வோம்
ஆயன் வழியிலே ஜீவனைக் கொள்வோம்
இயேசுவே மீட்பின் ஒளியெனச் சொல்வோம்!

Jeni -"Eagle"



பயப்படாதிருங்கள்

Dr. தியோடர் வில்லியம்ஸ்

மற்றவர்கள் நம்மை ஒதுக்கிவைக்கும்போது, அல்லது வேண்டுமென்றே நம்மை அடக்கி வைக்கும்போது ஒரு பாதுகாப்பற்ற உணர்வுக்குள்ளாகி விடுகிறோமல்லவா. அப்பொழுது பயம் நம்மை ஆட்கொள்ளுகிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையிலும்கூட ஆண்டவர் நம்மைப் பார்த்து "பயப்படாதிருங்கள்" என்று தானே கூறுகிறார்.

லூக்கா 2ஆம் அதிகாரத்திலே உள்ள கிறிஸ்துமஸ் சம்பவத்திலே "பயப்படாதிருங்கள்" என்றுதான் கூறுகி றார் (லூக்கா 2:8). "அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கி றேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

இந்த மேய்ப்பர்கள் யார்? ஒருவேளை தேவாலயத்திலே பலிகளுக்காக பயன்படுத்தப்பட்ட ஆடுகளை அவர்கள் மேய்த்து கொண்டிருந்திருக்கலாம். ஏனென்றால் பெத்ல கேமுக்கும் எருசலேமுக்கும் அவ்வளவு தூரம் இல்லை. அவர்கள் ஆடுகளைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, அன்றைய சமுதாயத்தில் மேய்ப்பர்கள் வரம்பில் வைக்கப்பட்டவர்கள். சாதாரண மக்களைவிட கீழானவர்கள் என ஒதுக்கப்பட்டவர்கள். வழக்குமன்றங் களிலே அவர்களுடைய வாக்கு செல்லாது. மதசம்பந்த மான கூட்டங்களிலே அவர்களுக்கு மதிப்பு கிடையாது. தேவாலயத்திற்கோ ஜெப ஆலயத்திற்கோ அவர்கள் வரமுடியாது. அவர்கள் அசுத்தமானவர்கள், தீட்டுள்ள வர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே திடீரென்று அவர்களுக்கு இவ்விதமான ஒரு தரிசனம் கிடைக்குமானால், ஒரு அனுபவம் கிடைக்குமானால் அது அவர்களை கலக்கி யிருக்குமல்லவா! அதிலே ஆச்சரியமில்லை. அதுமட்டு மல்ல, 400 ஆண்டுகளாக கடவுளின் வெளிப்பாடு இல்லை, வெளிச்சம் இல்லை. கடவுள் தீர்க்கதரிசிகள் மூலமாக பேசுகிறதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை யிலே சாதாரண மக்கள், ஒதுக்கப்பட்டவர்கள், தீட்டுப் பட்டவர்கள் அவர்களுக்கு இப்படிப்பட்டதொரு தரிசனம் கிடைக்குமானால் அது அவர்களை கலக்கிவிட்டது.

அருமையான சகோதரனே, சகோதரியே நம்முடைய வாழ்க்கையிலே இப்படித்தான் அநேக வேளைகளிலே நம்மை நாமே தள்ளிவைத்து விடுகிறோம். ஆனால் தேவன் நம்மைத் தள்ளிவைக்க மாட்டார். அவரிடத்தில் வருகிற யாரையும் அவர் தள்ளுவதில்லை என்று சொல்லியிருக்கிறார் அல்லவா. எனவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உன்னை ஒருபோதும் தள்ளமாட்டார்.

அவருடைய திட்டத்திலே குப்பைக் கூடைகள் அவர் வைத்ததில்லை. உன்னைத் தூக்கி குப்பைக்கூடை யிலே போட்டுவிடமாட்டார். நான் தகுதியற்றவன், தீட்டுப்பட்டவன் என்று அநேகமுறை நம்மை நாமே ஒதுக்கி விடுகிறோம். நம்முடைய பெயரைக் கிறுக்கிப் போடுகிறோம். ஒருபொழுதும் அப்படி செய்யக்கூடாது. உங்கள் பெயரை நீங்கள் கிறுக்கிப் போடக்கூடாது. கர்த்தர் அவ்வாறு செய்யமாட்டார். அவர் நம்மெல்லா ருக்கும் ஆதரவு தந்து, அங்கீகரித்து நமக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்தித் தருகிறார். அவர் மீட்பரல்லவா! இதுதானே கிறிஸ்துமஸ் செய்தி!

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான தம்பி, தங்கையே, ஒருவேளை உன் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஒரு பெரிய தோல்வியினாலே அல்லது பாவத்தினாலே நீ உன்னையே ஒதுக்கி வைத்திருக்கிறாயா? நான் ஒன்றுக்கும் உதவமாட்டேன். ஆண்டவரும் என்னைத் தள்ளிவிடுவார். மனிதர் என்னை வெறுக்கிறார்கள்.

எனக்கு அவமானமாய் இருக்கிறது என்றெல்லாம் எண்ணி உன் பெயரை நீ கிறுக்கிப் போட்டிருக்கிறாயா?

இதோ கர்த்தர் உன்னோடு பேசுகிறார். கர்த்தர் உன்னைத் தள்ளிவிடுவதில்லை. இந்த மேய்ப்பர்களைப் பாருங்கள். சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டவர்கள்தான் அவர்கள். யாரும் அவர்களிடத்திலே வந்து இயேசு பிறந்திருக்கிறார் என்று சொல்லமாட்டார்கள். ஆண்ட வரே அவர்களோடு பேசவில்லையானால், தேவன்தாமே அந்த செய்தியை அனுப்பியிருக்கவில்லையானால் அவர்களுக்கு அந்த செய்தி தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிறந்திருப்பார், அவர் வாழ்ந்து அற்புதங்களைச் செய்து சிலுவையிலே மரித்து உயிர்த்தெழுந்திருந்திருப்பார். ஆனால் இந்த மேய்ப்பர்களோ கேள்விப்பட்டிருக்கவே மாட்டார்கள். ஏனென்றால் பக்தியுள்ளவர்களின் கூட்டம் இவர்களைத் தேடிச் செல்லாது. ஏன், தீர்க்கதரிசிகளும் கூட ஒருவேளை இவர்களைத் தேடிச் சென்றிருக்க மாட் டார்கள். ஆசாரியர்களோ அவர்கள் பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இவ்வாறான சூழ்நிலையிலே தேவன் அவர்களுடைய வாழ்க்கையிலே குறுக்கிட்டார். ஆம், கர்த்தர் அவர்களிடத்தில் "பயப்படாதிருங்கள்" என்று சொல்லுகிறார்.

அருமையான சகோதரனே, சகோதரியே வாழ்க்கையில் நீங்கள் உங்களையே ஒதுக்கிவைக்கக்கூடாது. நீங்கள் பயப்படக்கூடாது. உங்களுக்கு இந்தச் சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? ஒருவேளை நம்மு டைய பின்னணியினாலே அப்படியிருக்கலாம் அல்லவா! சிலசமயம் நம்முடைய செயல்கள் நம்மை தீட்டுப்பட்ட வர்களாக்கி நம்மை ஒதுக்கிவிடக்கூடும். பாவத்தில் விழுந்துவிட்டோம். எவ்வளவோ மக்கள் நம்மிடத்தில் மேலானதை எதிர்பார்த்தார்கள். ஆனால் நாம் பயங்கர மான ஒரு காரியத்தைச் செய்துவிட்டோம். ஆனால் கர்த்தர் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்கிறார். பிறர் நம்மை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நாம் நம்மையே ஒதுக்கிவிட்டு நம் பெயரை கிறுக்கிவிட எண்ணுகிறோம். உலகம் நம்மை ஒதுக்கி வைத்திருக்கலாம். குடிகாரன், சூதாட்டக்காரன் அல்லது போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவன், விபசாரக்காரன், வேசித்தனம் உள்ளவன் என்றெல்லாம் மக்கள் நம்மை ஒதுக்கியிருக்கலாம். ஆனால் கர்த்தர் நம்மை ஒருபோதும் ஒதுக்கி வைக்கமாட்டார்.

என் அருமையான சகோதரனே சகோதரியே, அப்படிப் பட்ட ஒதுக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், உள்ளத்தில் புண்பட்டவர்கள், தங்கள் வாழ்க்கையிலே அடிபட்டவர்கள் இவர்களுக்காகத்தானே இரட்சகர் வந்திருக்கிறார். தேவதூதன் சொன்ன செய்தி என்ன என்று பாருங்கள்: பயப்படாதிருங்கள்! இந்த நற்செய்தி யை உங்களுக்கு நான் அறிவிக்கிறேன். மற்றவர்கள் இந்த நற்செய்தியை உங்களுக்குச் சொல்லமாட்டார் கள். எனவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல, லூக்கா 2:11இல் "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்று கூறுகிறார்.

"உங்களுக்கு" என்ற அந்த சொல் நிச்சயமாக மேய்ப் பர்களின் உள்ளத்திலே ஆழமாய் சென்றிருக்கும். நமக்கு இந்த செய்தியாமே! நமக்கு இரட்சகர் வந்திருக்



கின்றாராமே! என்று அது அவர்களை எவ்வளவு உற்சாகப்படுத்தியிருக்கும் அல்லவா.

"பயப்படாதிருங்கள்" என சொல்லிவிட்டு அவர்களுக்கு அங்கீகரிப்பின் சொல்லைத் தருகிறார் தேவன். ஆம், மரியாளுக்கு தைரியத்தின் சொல், சகரியாவுக்கு நம்பிக்கையின் சொல், யோசேப்புக்கு நிச்சயத்தின் சொல், இந்த மேய்ப்பருக்கோ அங்கீகரிப்பின் சொல்; அது பயத்தை நீக்கும் சொல்!

மனிதர் நம்மைத் தள்ளிவைத்திருக்கும் நிலையிலே ஆண்டவர் நம் வாழ்க்கையிலே குறுக்கிடுகிறார். அவர் குறுக்கிடாவிட்டால் யாரும் நம்மைத் தொட்டிருக்க மாட்டார்கள். மற்றவர்களால் தீண்டப்படாதவர்கள் என எண்ணக்கூடிய நிலையிலே கர்த்தர் நம்மைத் தீண்டு கிறார், நம்மைத் தொடுகிறார், நம் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார், அவர் யாரையும் தள்ளி விடமாட்டார்.

கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்ளவும், சேர்த்துக்கொள்ள வும் அவர் நெருங்கிவருகிறார். அதுமட்டுமல்ல, மற்றவர்கள் பேசமாட்டார்கள், ஆனால் அவர் நம்மோடு பேசுகிறார். அவருடைய அக்கறையை நம்மிடத்தில் காட்டுகிறார். நம்மோடு உறவுகொள்ள நாடுகிறார்.

அந்த மேய்ப்பர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? உடனே அந்தச் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து பெத்லகே முக்குச் சென்றார்கள். அங்கே போய் அந்தப் பிள்ளை யைக் காண்பதற்காகச் சென்றார்கள். பிள்ளையைக் காண்பீர்கள் என்று தூதர் சொன்னார் இல்லையா? உடனே கீழ்ப்படிந்து அங்கு சென்றார்கள், பாலகன் இயேசுவைக் கண்டு பணிந்து கொண்டார்கள்.

"தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பர்களும் தங்களுக்கு சொல்லப் பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்." (லூக்கா 2:16,17,20)

மேய்ப்பர்கள் தமது வாழ்விலே தங்கள் நோக்கத்தைக் கண்டுகொண்டார்கள். அதை நிறைவேற்றினார்கள். இதைத்தான் நமக்கும் அவர் செய்வார். ஆகவே இனி உலகத்தைக்கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை!

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

சத்தியவசனம் சித்திரப் போட்டி - 2014

அருமையானவர்களே, தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள சித்திரம் தீட்டும் தாலந்தை வெளிக்காட்ட ஒரு அருமையான சந்தர்ப்பம். இந்நாட்களில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட ஆயத்தமாக இருக்கும் நீங்கள், சித்திரப் போட்டியில் பங்குபெற செய்யவேண்டியது இதுதான்:

சத்தியவசனம் சித்திரப் போட்டி - 2014

A4 அளவான ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் சித்திரம் வரையப்பட வேண்டும். A4 வெள்ளைத்தாளின் மறுபக்கத்தில் உங்கள் பெயர், முழுமையான விலாசம், வயது, அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், தலைப்பு அல்லது வேத வசனம் போன்றவற்றை தெளிவாக குறிப்பிடாத சித்திரங்கள் யாவும் நிராகரிக்கப்படும். 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் உங்கள் பாடசாலையின் பெயரையும் என்ன வகுப்பில் கல்வி கற்கின்றீர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும். இது எனது சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தாத சித்திரங்கள் நிராகரிக்கப்படும்.

கிறிஸ்தவ வேதாகம சத்தியங்களை வெளிப்படுத்தும் சித்திரம் அல்லது படம் மாத்திரமே தெரிவுசெய்யப்படும். சித்திரத்தின் தலைப்பு எதுவாகவும் இருக்கலாம். சுருக்கமாக இனிமையாக வேத வசன போதனையைத் வெளிப்படுத்தும் சித்திரத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்படும். தரமான சித்திரங்கள் சத்தியவசனம் சஞ்சிகையில் பிரசுரமாகும்.

இப்போட்டியில் வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபெறலாம். நீங்கள் அனுப்பி வைக்கும் எந்தவொரு சித்திரமும் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அனுப்பிவைக்கப்பட மாட்டாது என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடைசி திகதி 2014 ஜனவரி 31ம் திகதி. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.



ஏதேன் விபரங்களைப் பெற:

- இங்கு வெளிவரும் விளம்பரங்களில், "பொருத்தமானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள் தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்புகொள்வர்.
- இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மைக் குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.
- ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஏதேன் சஞ்சிகையில் பிரசுரிக்க:

- உங்கள் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்பப் படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.
- உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2013 ஜனவரி 31ம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாயின் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.
- உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படாவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படும் இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
- இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு:

"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.

மணமகன் விபரம்

(2014/**E.M**/3271) வயது 30, உயரம் 5'10". கிறிஸ்து நாதர் ஆலயம். க.பொ.த(உ/த) கற்று தனியார் நிறுவனத்தில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆

(2014/**E.M**/3272) வயது 35, உயரம் 5'10". C.S.I சபை. B.A பட்டதாரி. பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு, 30 வயதிற்குட்பட்ட பட்டம்பெற்ற ஆசிரியையாக அல்லது அரச தொழில்புரியும் மணமகளைத் தேடுகின்றனர். (சண்டிலிப்பாய்).

◆ ◆ ◆

(2014/**E.M**/3273) வயது 43, உயரம் 5'9". A.O.G சபை. நற்குணம், இறைபக்தியுள்ள Computer Instuctor ஆக கடமையாற்றும் இளமைத்தோற்றமுள்ள மணமகனுக்கு, நற்குணமுள்ள மணமகளை தேடுகின்றனர் (கொழும்பு 5).

◆ ◆ ◆

(2014/**E.M**/3274) வயது 25, உயரம் 5'3". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று வெளிநாட்டில் Steward ஆக Hotel ல் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆

(2014/**E.M**/3275) வயது 36, உயரம் 5'5". A.O.G சபை. **B.Com, CMA** கற்று விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

◆ ◆ ◆

(2014/**E.M**/3276) வயது 24, உயரம் 5'8". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(உ/த) Engineering Course கற்று டுபாயில் Marketing கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வென்னப்புவ).

◆ ◆ ◆

(2014/**E.M**/3277) வயது 47, உயரம் 6'2". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(உ/த) கற்று Cleaning Company சொந்தமாக நடத்தும் நோர்வையை வசிப்பிடமாகக் கொண்ட மணமகனுக்கு, 40 வயதிற்குட்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 9). (மேலதிக விபரங்களை இவர்களோடு தொடர்புகொள்ளும்போது மட்டும் தெரிந்துகொள்ளலாம்).

◆ ◆ ◆

(2014/**E.M**/3278) வயது 29, உயரம் 5'5". C.P.M சபை. க.பொ.த(உ/த) கற்று Accountant ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, தொழில் செய்யும் மணமகளைத் தேடுகின்றனர். (டிக்கோயா).

◆ ◆ ◆

(2014/E.M/3279) வயது 28, உயரம் 5'8". ஏழாம்நாள் திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று Hotel Supervisor ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கந்தானை).

◆ ◆ ◆

(2014/E.M/3280) வயது 32, உயரம் 5'8". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

◆ ◆ ◆

மணமகள் விபரம்



(2014/E.F/2506) வயது 27, உயரம் 5'. Jesus Saves சபை. Diploma in Business Management கற்று Management Assistant ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆

(2014/E.F/2507) வயது 43, உயரம் 5'. A.O.G சபை. க.பொ.த(சா/த) கற்று சொந்தமாக தொழில் செய்கின்ற வேதாகம கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும் மணமகளுக்கு மணமகனை தேடுகின்றனர். (கொழும்பு 5).

◆ ◆ ◆

(2014/E.F/2508) வயது 31, உயரம் 172 cm. A.O.G சபை. க.பொ.த(உ/த) Conselling Course கற்று NGO ஒன்றில் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

◆ ◆ ◆

(2014/E.F/2509) வயது 30, பெத்தேல் சபை. க.பொ.த(சா/த) கற்று ஊழியம் செய்கின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (உரும்பிராய்).

◆ ◆ ◆

(2014/E.F/2510) வயது 27, உயரம் 5'3". லூத்தரன் திருச்சபை. Business Management கற்று கல்லூரி ஒன்றில் Administrator ஆக கடமையாற்றும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (நுவரெலியா).

◆ ◆ ◆

(2014/E.F/2511) வயது 33, உயரம் 5'1". இலங்கை பெந்தகோஸ்த சபை. Charted கற்றுக்கொண்டே கணக் காய்வாளர் திணைக்களத்தில் பணிபுரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

◆ ◆ ◆

(2014/E.F/2512) வயது 27, உயரம் 5'2". அங்கிலிக்கன் திருச்சபை. CIMA கற்று Financial Analyst ஆக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆

(2014/E.F/2513) வயது 25, அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(உ/த) கற்று Nursery Teacher ஆக பணிபுரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொட்டகல).

◆ ◆ ◆

(2014/E.F/2514) வயது 36, உயரம் 5'3". R.C சபை. CIM கற்று Shipping ல் தொழில்புரியும் மணமகளுக்கு படித்த உயரமான தேவ பயமுள்ள தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். (ஜா-எல).

◆ ◆ ◆

(2015/E.F/2515) வயது 42, உயரம் 5'. ஆறுதல் வாசல் சபை. ஊழியம் செய்யும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

◆ ◆ ◆

(2015/E.F/2516) வயது 43, உயரம் 5'5". C.P.M சபை. க.பொ.த(உ/த) கற்று ஆங்கில ஆசிரியையாக பணியாற்றும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (டிக்கோயா).

◆ ◆ ◆

(2015/E.F/2517) வயது 30, உயரம் 5'2". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(உ/த) கற்று Inssurance Assistant ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆

(2015/E.F/2518) வயது 43, உயரம் 5'5". A.O.G சபை. க.பொ.த(உ/த) கற்று தனியார் துறையில் பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 3).

◆ ◆ ◆

(2015/E.F/2519) வயது 27, உயரம் 5'. க.பொ.த(உ/த). Computer IT கற்று கிறிஸ்தவ நிறுவனமொன்றில் பணிபுரியும் மணமகளுக்கு இரட்சிக்கப்பட்ட ஊழியம் செய்யும் மணமகனைத் தேடுகின்றனர். (நுவரெலியா).

◆ ◆ ◆

(2015/E.F/2520) வயது 42, உயரம் 4'8". Zion Mount Rivivel சபை. க.பொ.த(சா/த) கற்று Travel Assistant ஆக தொழில்புரிகின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

◆ ◆ ◆



புதுவருடம் என்றால், அனைவரது உள்ளத்திலும் இல்லத்திலும் புதிதான உற்சாகமும் இன்பமும் உதயமாவதை எவராலும் தவிர்க்கவோ, மறுக்கவோ முடியாது. இந்நாட்களில், பலர் புதிய எதிர்பார்ப்புடன் செயற்பட ஆரம்பிப்பார்கள். அந்தவகையில், கடந்த வருடத்தில் நாம் போட்ட திட்டங்கள், எடுத்த தீர்மானங்கள் அனைத்தையும் சற்று எண்ணிப் பார்த்தவர்களாக, தேவனுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும். அதுமாத்திரமல்ல, எடுக்கப்போகும் புதிய திட்டங்கள் தீர்மானங்கள் பற்றி தீவிரமாக ஆராய்ந்து முடிவு செய்யவும் வேண்டும். அதற்கு நாம் தேவனில் நம்பிக்கை வைக்கவும் வேண்டும்.

நன்றியறிதல்:

கடந்தகாலங்களில், எத்தனையோ இன்னல்கள், இக்கட்டுகள் மத்தியிலும் கர்த்தர் நம்மை எவ்வாறு தன் கண்மணிபோல பாதுகாத்து, தன் கைக்குழந்தையைப்போல பராமரித்து வந்தார் என்பதை மறந்துவிடுகிறோமா? அவருக்கு நன்றி செலுத்தாதவர்களாக வாழ்கிறோமா? சிந்திப்போம்.

நன்றியறிதல் இல்லாவிடில் நமது வாழ்வு திருப்தியற்ற ஒன்றாகி விடும். கர்த்தரிடமிருந்து நாம் பெற்ற கிருபைகளை உணர்ந்து, சகலவிதமான நன்மைகளுக்காக, அவரை நன்றியோடு துதிப்போம்.

'ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும் நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே' (உபாகமம் 1:31) என 40 வருடங்களாக, கர்த்தரால் வனாந்தரத்தில் வழிநடத்தப்பட்ட இஸ்ரவேல் மக்கள், வாக்குத்தத்த பூமிக்குள் காலடியெடுத்து வைப்பதற்கு முன்பதாக மோசே நினைவூட்டினார். இஸ்ரவேல் மக்களை கர்த்தர் எவ்வாறு சுமந்துகொண்டு வந்தாரோ, அதேபோல், கடந்தகாலங்களில், நாம் நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும் நம் தேவனாகிய கர்த்தரே நம்மைச் சுமந்து, காத்து, வழிநடத்தி வந்துள்ளார்.

பலவிதமான பேராபத்துக்களையும் பேரிழப்புகளையும் கசப்பான சம்பவங்களையும் சகிக்கமுடியாத துயரத்தையும் துன்பத்தையும் முன்பு நாம் அனுபவித்திருக்க லாம். எனினும் இவை யாவற்றி னூடாகவும் கர்த்தர் நம்மை கைவிடாமல் தாங்கிவந்துள்ளார். இப்படி அவர் நம்மைச் சுமந்து வந்திருக்காவிட்டால், துன்பப் புயலிலும் துயர அலையிலும் அடிபட்டு மடிந்திருப்போம். ஆனாலும் கர்த்தர், ஒரு மனிதன் தன் பிள்ளைளை சுமந்துகொண்டு போவதுபோல, நாம் நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும் நம்மைச் சுமந்துகொண்டு வந்துள்ளார். கர்த்தரே நம்மைத் தாங்கி பராமரித்து வந்தார். இதை நினைவுகூர்ந்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமல்லவா.

நம்பிக்கையோடிருத்தல்:

இதுவரை அன்புடன் பராமரித்த வர், இனியும் பராமரிப்பார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நாம் எதிர்காலத்திற்கு முகங்கொடுக்க வேண்டும். 'தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களை தாங்கினேன்' (ஏசாயா 46:3) எனக் கூறும் நம் தேவனாகிய கர்த்தர், 'இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன்' (ஏசா.46:4) என நமக்கு வாக்களித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, 'உலகத்திலே உங்களுக்கு உபத்திரவமுண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்' (யோவான் 16:33) என இயேசு கூறியுள்ளார்.

'அநாதி தேவனே உனக்கு அடைக்கலம், அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்' (உபா.33:27) என்ற வார்த்தையின்படி, தேவன்மீதுள்ள நமது நம்பிக்கையை உறுதியாக பற்றிக்கொள்வோம். 'உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார். அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை' (உபா.31:6) 'உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப்பிடித்து, பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.' (ஏசா.41:13) என அன்புடனும் பாசத்துடனும் வாக்களித்துள்ள கர்த்தர்தாமே, நம்மை பாதி வழியில் தனியே விட்டுவிடுவாரோ? இல்லை.

கடைசிவரை அவரே நம்மைப் பாதுகாப்பார். கஷ்டங்கள், நஷ்டங்கள் வரும்போதும், அவர் நம்மைக் கைவிட்டுவிட மாட்டார். 'கடும் புயல்வரினும் கடும் காற்று வீசினும் இயேசு என்னை கைவிட மாட்டார்' என உங்களால் இனி பயமின்றி பாடமுடியும். இந்த நம்பிக்கையுடன் எதிர்வரும் காலங்களை தேவனின் கரங்களில் ஒப்புவித்து, நம்மை அர்ப்பணித்து வாழுவோமாக.

கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக!

அன்புடனும் ஜெபத்துடனும்,
சஞ்சிகை ஆசிரியர்.

சிறுவர் சோலை

விடைகளை ஜனவரி 6ம் திகதிக்குமுன்
சிறுவர் சோலை, த.பெ. 1012 கொழும்பு
என்ற விலாசத்திற்கு தபாலட்டையில் மாத்திரம்
உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.

தயாரிப்பு: நியோமி ஏனஸ்ட்



இ	து	து	ப்	கி	எ	பு	ப்	சே	யோ
ம்	ச	ஸ்	வீ	ள	லி	கே	யா	வா	ந
மா	இ	க	றி	தா	ச	ர்	ன்	ட்	கோ
னு	லி	ல்	ரி	கி	பெ	அ	ன்	னா	ள்
வே	த	யூ	தே	யா	த்	யா	லே	லி	க
ல்	ம்	அ	கு	ஸ்	து	ரா	ய	ன்	ர்
யே	கே	சி	ள்	யா	ரி	ம	மா	யோ	ப
ரி	ல	ர்	க	ச	ட்	ர	இ	மி	ப்
பி	த்	சா	ஸ்	தி	ரி	க	ள்	சி	ய்
கா	பெ	எ	ரு	ச	லே	ம்	ச	வ	மே

கிறிஸ்து பிறப்புடன் தொடர்புள்ளவற்றைக் கண்டுபிடியுங்கள்.

1. குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென கட்டளை பிறப்பித்தவன்.
2. இயேசுவின் தாய்
3. குழந்தை பிறக்குமென அறிவித்த தூதன்
4. இந்த தேசத்தாரும் கலங்கினார்கள்
5. யோவான் ஸ்நானகனின் தாய்
6. இந்த நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்
7. "உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" என்று கூறியவர்
8. இயேசுவின் வழியை ஆயத்தம்பண்ண வந்தவன்
9. சந்தேகத்தினால் ஊமையானவன்
10. நீதிமான், பிறரை அவமானப்படுத்த மனதில்லாதவன்
11. தேவாலயத்தை விட்டு போகாமலிருந்த எண்பத்துநாலு வயது நிரம்பிய விதவை
12. இயேசுவின் பிறப்பை அறிந்து முதலாவதாக தேடி வந்தவர்கள்
13. இயேசு இவரது வம்சத்தில் வந்து பிறந்தார்
14. இங்கிருந்து என் குமாரனை வரவழைப்பேன் என தீர்க்கதரிசிகள் மூலமாய் கர்த்தரால் உரைக்கப்பட்டது.
15. யூதேயா நாட்டிலுள்ள தாவீதின் ஊர்
16. நட்சத்திரத்தைக் கண்டு கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்தவர்கள்
17. தாவீதின் ஊரிலே பிறந்தஇரட்சகர்
18. தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்
19. இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இவரை தேவன் எழும்பப்பண்ணினார்
20. நாசரேத் இந்த நாட்டிலுள்ள ஊர்

Registered in the Department of
Post of Sri Lanka under
No. QD/106/News/2013

To:

BACK TO THE BIBLE
ජීවිතාලෝකය සත්‍යවචනම්

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

வேத வசனங்களடங்கிய
கலண்டர்

BACK TO THE BIBLE
ජීවිතාලෝකය සත්‍යවචනම්



2014

எமது புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்...

73/2 தர்மராம வீதி,
மாத்தறை
: 091 4943188

120 A, தர்மபால மாவத்தை,
கொழும்பு – 07.
: 011 4691511

9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்
: 021 4925770